## அதிகாரம் 6

# ஜலப்பிரளயம்: அழிவும், பாதுகாப்பும்

ஆதியாகமம் லாமேக்கு மற்றும் அவர் பிள்ளைகள் வழியாக காயீனின் வம்ச வரலாற்றை 4ம் அதிகாரம் காண்பிக்கிறது, 5ம் அதிகாரம் சேத் வழியாக நோவா வரைக்கும், அவரது மூன்று மகன்களையும் (சேம், காம், மற்றும் யாபேத்) பெயரிடுகிறது. அதிகாரம் 6, அடுத்த சந்ததியாரை அடையாளப்படுத்தத் துவங்கிய முறைகேடான ஒழுக்கக்கேடுகளை விவரிப்பதுடன் தொடர்கிறது.

### தேவகுமாரர் மற்றும் மனுஷ குமாரத்திகள் (6:1-4)

**1மனுஷர் பூமியின்மேல் பெருகத் துவக்கி, அவர்களுக்குக்
குமாரத்திகள் பிறந்தபோது: 2தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக
சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப்
பெண்களைத் தெரிந்துகொண்டார்கள். 3அப்பொழுது கர்த்தர்: என் ஆவி
என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே,
அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார்.
4அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்; பின்பு தேவகுமாரர்
மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப்
பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற
மனுஷராகிய பலவான்களானார்கள்.**

**வசனங்கள் 1, 2.** இந்த அதிகாரம் பூமியின்மேல் **மனுஷன் பெருகத் துவங்கியதிலிருந்து** தொடங்குகின்றது, **அவர்களுக்கு குமாரத்திகள் பிறந்தனர்**. இப்பெண்கள் வயதுக்கு வந்தபோது, **மனுஷ குமாரத்திகள் அதிக சௌந்தரியமுள்ளவர்கள் என தேவகுமாரர் கண்டனர்.** இதன் பலனாக **அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்.**

"தேவகுமாரர்" என ஆசிரியர் யாரை இங்கு குறிப்பிடுகின்றார்? குறைந்தது மூன்று வியாக்கியானங்களை இச்சொற்றொடர் பரிந்துரைக்கிறது. முதலாவதான இது பரலோக தேவதூதர்களை குறிக்கிறது (காண்க யோபு 1:6; 2:1). இது[1] ஏனோக்கு என்ற யூதர்களின் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய தள்ளுபடி ஆகமத்தின் யூத

ஆசிரியரின் நம்பிக்கை, இந்த தெய்வீக ராசிகள் மனு உருக்கொண்டு வந்து “மனுஷகுமாரத்திகளுடன்” கலவினர் (புணர்ந்தனர்). இவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட துன்மார்க்க இராட்சதர்களைப் பெற்றெடுத்தனர். (“நெப்பிலிம்”) இது இன்றைக்கும் பொதுவான ஒரு கருத்தாகக் காணப்படுகின்றது.[2]

இப்படிப்பட்ட கருத்தை நாம் தள்ளவேண்டும் ஏனெனில் இயேசு கிறிஸ்துவின் கூற்றான மத்தேயு 22:30ல் அவர் சொன்னார் மனிதர்கள் பரலோகத்திலே தேவதூதரைபோல் (தெய்வீக ராசிகளாக) இருப்பார்கள்; “அவர்கள் கொள்வதும் இல்லை கொடுப்பதும் இல்லை.” மனிதர்கள் (தூதர்கள் அல்ல[3]) “நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் ... பெண் கொண்டும் பெண்கொடுத்தும்” (மத். 24:38) இருந்தார்கள். லூக்காவின் வாக்குப்படி இயேசு சேர்த்துக் கூறுகிறார், மரணத்திலிருந்து உயிர்த்தவர்கள், “அவர்கள் இனி மரிக்கவு மாட்டார்கள்; தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய்,” இருப்பார்கள் என்று (லூக். 20:35, 36) தேவதூதர்கள் மரணமடையாதவர்களாய் இருக்கிறபடியினால் “தேவகுமாரர்” “மனுஷ குமாரத்திகளை” திருமணம் செய்தபடியினால் (தங்களுக்குப் பிறந்த குழந்தை களுடன்) பெருவெள்ளத்தில் இறந்து போனதால் “குமாரர்” தேவதூதர்களாயிருக்க வாய்ப்பில்லை.

பெருவெள்ளம் பாவத்தினால் உலகத்தின் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பாகும். இது தேவதூதர்களின் பாவமல்ல, ஆனால் “பலமான மனிதர்களின்” “துன்மார்க்கம்” இவர்கள் “பேர் பெற்ற மனுஷர்கள்” என்று 6:4, 5ல் அழைக்கப்படுகின்றனர். பெரு வெள்ளத்தில் தேவனுடையக் கோபாக்கினை தேவதூதர்களுக்கோ அல்லது பாதி தேவதூதருடைய குழந்தைகளுக்கோ எதிரானதோ அல்ல. “மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல் நிக்கிரகம் பண்ணுவேன்” (6:7) எனத் தீர்மானிக்கிறார். ஏனெனில் அவர்களே குற்றவாளிகளாவார்கள். ஆதியாகமம் மற்றும் இயேசுவின் போதனைகள் தெய்வீகம் மற்றும் மனிதர்களுக்கிடையே திருமண பந்தத்தை ஆதரிக்கிறதில்லை, அவர்களுக்குப் பிறந்த பாதி வம்சத்தாரே பெருவெள்ளத்திற்குக் காரணம் என்ற கருத்தை நிராகரிக்கிறது.

இரண்டாம் வியாக்கியானம் “தேவகுமாரர்” என்போர் “பலசாலியான” மனிதர்கள், ஒருவேளை “ஆளுபவர்களாக”[4] இருக்கலாம், இவர்கள் “மனுஷ குமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்கள்” என கண்டு தமக்கென “யாரையெல்லாம் தெரிந்தெடுத்தார்களோ” அவர்களை தமக்கு மனைவியராக எடுத்திருக்கலாம். யூத ரபிமார்கள் இது முந்தைய வியாக்கியானத்திற்கு ஒரு மாற்று கருத்துக் கணிப்பென கருதுகின்றனர். தெய்வீக ராசிகள் பூமிக்கு வந்து மனிதப் பெண்களுடன் பாலுறவுகொள்ளுவர், என்ற இக்கருத்து பழமையான யூத ரபீமார் எற்றுக்கொள்ள இயலாதக்கருத்து,

இது முற்றிலும் புற மதத்தவரின் கருத்து.

ஆளுபவர்கள், பண்டைய உலகத்தில் பெரிய நீதிபதியாவார், இவர்கள் "தேவர்கள்" என அழைக்கப்படுவார்கள் சங்கீதம் 82ல் உள்ளது போல். இவர்கள் தங்கள் குடிமக்கள் மேல்முறையீடு செய்யும் உயர் நீதிமன்றத்தைப் போல் அதிகாரமுடையவர்கள். இவர்கள் "உன்னதமானவரின் மக்கள்" எனப்படுகிறார்கள் (சங். 82:6).[5] ஆனால் அவர்கள் தேவர்களோ, தெய்வீக ராசிகளோ அல்ல.[6] ஆளுகிறவர்கள் "தேவகுமாரர்" என ஆதியாகமம் பாடத்தில் நாம் காண்கிறதில்லை. (தேவர்களோ அல்லது தேவதூத ராசிகளோ) வலுக்கட்டாயமாக மனுஷகுமாரத்திகளை திருமணம் செய்யவோ அல்லது அந்தப்புரத்தின் ஒரு பகுதியாக எடுக்கவோ இல்லை. சங்கீதம் 82ஐ ஆதியாகமம் 6:2ன் ஜலப்பிரளயத்திற்கு முந்தின சந்தர்ப்பத்துடன் இணைத்துப் படிப்பது புதிய வியாக்கினத்தை சிருஷ்டிப்பது போலாகும்.

மூன்றாவதும் அதிக பொருத்தமான வியாக்கியானம், "தேவகுமாரர்" ஆதியாகமம் 5ம் அதிகாரத்தில் வரும் சேத்தின் சந்ததி. இவர்கள் நீதிமான்களும், தேவனுக்குப் பயப்படுகிறவர்களுமான மனிதர்களாக ஏனோசின் வழியில் வந்தவர்களாவார்கள். இவர் மூலமான மனிதர்கள், "மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்" (4:26). இவர்கள் தேவனோடு நடப்பது குறித்து உண்மையான மாதிரியை முன் வைத்த ஏனோக்கின் சந்ததியராகவும் இருந்தனர் (5:24).

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் தேவனுடைய மக்களை "தேவகுமாரர்" என அழைக்கிறது. ஆதாமுக்கு (லூக். 3:38), இஸ்ரவேலருக்கு (யாத். 4:22, 23; ஏசாயா 1:2, 4; எரே. 3:14, 22; ஓசியா 11:1), மற்றும் கிறிஸ்தவர்களுக்கு (கலா. 3:26; 4:5) இது உண்மையாகிறது. "தேவகுமாரன்" ஆதாம் பார்ப்பதற்கு "நல்ல" ("அழகானது," "விரும்பப்படத்தக்கது" [טוֹב, *tob*, டோப்; 3:6]), விலக்கப்பட்ட கனியைப் பார்த்து பாவம் செய்தது போல் அவனுடைய சந்ததியினர் இப்படிப்பட்ட சோதனைக்குட் பட்டனர். "தேவகுமாரர்" சேத் வழியாக வந்தவர்கள் "மனுஷகுமாரத்திகள்" மீது மோகம் கொண்டு துக்ககரமான பாவத்தைச் செய்தனர், குமாரத்திகள் என்பது ஒருவேளை காயீனுடைய சந்ததி. "தேவகுமாரர்" அவர்களை "அழகுள்ளவராய்" (*டோப்*; "நல்லது" அல்லது "விரும்பப்படத்தக்கவர்களாய்"), கண்டு தங்களுக்கு வேண்டிய அளவுக்கு மனைவிகளைத் தெரிந்து கொண்டனர்.

இப்பெண்கள் அழகுள்ளவர்களாய் இருந்தது மட்டும் பிரச்சனை அல்ல, அழகு தான் அவர்களின் ஒரே கவரச்சி. அவர்களிடம் ஆவிக்குரிய ஆழம் இல்லை, ஆனால் "உலக சிந்தையுள்ளவர்கள்," அல்லது "பொருள் சார்ந்த சிந்தையுள்ள" பெண்களாவார்கள். இப்படிப்பட்டவர்களைத் தான் நாம் ஏசாயா 3:16-4:1 மற்றும் ஆமோஸ் 4:1-3ல்[7] படிக்கிறோம். அது போல "தேவகுமாரர்" என்போர் தவறான நோக்கத்திற்காக திருமணம்

செய்பவர்களுக்கு ஒப்பாவார். இவர்கள் தங்கள் மனைவியின் ஆவிக்குரிய அல்லது ஒழுக்கநெறி குறித்து அக்கறைப்படாதவர்களாவர். அதற்கு எதிரிடையாக, தன்னலமான பெருமை, அதிகாரம், அழகான பெண்ணை மனைவியாகப் பெறுவதினால் கிடைக்கும் சமுதாயத்தின் அந்தஸ்து கிடைக்கும் என்பது நம்பிக்கை (காண்க 6:4). இவை எல்லாம் ஒருவருக்கு ஒருத்தி என்ற தேவனுடைய ஆதித்திட்டத்திலிருந்து தூர விலகி, லாமேக்கை போல் இரண்டு “மனைவி”யரை மணம் செய்துபின் “எவரையெல்லாம் விரும்பினரோ” அவர்களையெல்லாம் பலதாரமாக மணம் செய்தனர்.

**வசனம் 3.** எண்ணிறந்த சவால்களை இந்த வசனம் சொல்கிறது, இதற்குப் பல முடிவுகளை பரிந்துரைக்கிறது. எப்படியிருப்பினும், இந்தப் படிப்பு சில குறிப்புகளை முன்னிறுத்துகிறது.

இந்த வசனம் தேவன் சொல்கிறார் என இப்படி தொடங்குகின்றது, **என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே**, “என் ஆவி” என்பதின் பொருள் என்ன? NASB ஆங்கில வேதாகமத்தில்[8] இவ்வார்த்தை பெரிய எழுத்துகளில் அச்சிடப்பட்டுள்ளது (רוּחַ, *ruach*, ரூவா) இதற்கு தேவனுடைய தனிப்பட்ட பிரசன்னம் என்பது பொருள், 1:2ல் “தேவனுடைய ஆவி” தண்ணீர்களுக்கு மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் என்பது போல் உள்ளது. எபிரெயத்தில் பெரிய எழுத்துப் பயன்படுத்தப்படவில்லை, ஏனைய மொழிப் பெயர்ப்புகளில் ரூவா “ஆவி” என (சிறிய எழுத்தில்)[9] மட்டுமே எழுதப்பட்டுள்ளது. ஜீவன் கொடுக்கும் தேவனுடைய வல்லமை என்று அர்த்தப்படுகிறது. CEVயில் “ஆவி” என்பதற்கு பதிலாக “என் ஜீவ சுவாசத்தை” என பயன்படுத்தியுள்ளனர். இந்த உயிர் கொடுக்கும் மூச்சு மனிதருக்காகட்டும், மிருகங்களுகாகட்டும் அனைத்து உயிர்களுக்கும் தேவையான ஒன்று. ரூவா என்னும் பதம் 6:17 மற்றும் 7:15 ஆகிய வசனங்களில் திரும்ப வருகின்றது. NASB ஆங்கில வேதாகமத்தில் “ஜீவ சுவாசத்தை” எனப்பயன் படுத்தியுள்ளனர். இந்த மூன்று இடங்களிலும் பெருவெள்ள நிகழ்வோடு சம்மந்தப்படுத்தியே வருகின்றது. ஆகவே, “ஆவியை” எடுத்து என்பது தேவன் அவரது “ஜீவ சுவாசத்தை” அல்லது “ஆவி”யைத் திரும்ப எடுத்துக் கொண்டார் என்பதற்கு அடையாளம். பேழைக்குள் இருப்பவர் (இருப்பவை) தவிர்த்து, ஏனைய மனிதர் மற்றும் மிருகங்களின் ஜீவனை எடுத்துக் கொண்டதற்குச் சமானம்.

அடுத்ததாக (יָדוֹן, *yadon*, யாடோன்) “போராடு” பிரச்சனை. இந்த பதம் பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு முறை மட்டுமே பயன் படுத்தப்பட்டுள்ளது இதன் மொழியியலின் பொருள் என்னவென உறுதியாகச் சொல்லிட இயலாது என்ஐவி ஆங்கில வேதாகமம் இது போன்ற பொருளையே தருகின்றது. “விவாதம் செய்தல்,” அல்லது “போட்டியிடுதல்.” போராடுதல் அல்லது போட்டியிடுதல் என்பது

தேவன் தொடர்ந்து மனிதர்களுடன் போராடுகிறார் என்ற கருத்தை வலியுறுத்துகிறது, பாவத்தை விட்டுவிட்டு, படைத்தவரிடம் திரும்பச் செய்ய தண்டனையை சொல்லி அச்சுறுத்தி, கண்டித்து உணர்த்துவதாகும். காயீனோடும் அவன் சந்ததியோடும் இதைச் செய்தார் (4:1-24).

*யாடோன்* என்ற எபிரெய வார்த்தைக்கு "நிலைத்திருத்தல்"[10] என்றதொரு மாற்று மொழிபெயர்ப்பையும் அளிக்கிறது. மேலும் தேவன் "மனுஷன்" (אָדָם, *'adam*, ஆதாம்), எனக் குறிப்பிடும் போது தனிப்பட்ட ஒவ்வொரு எண்ணடங்கா சந்ததியாரைக் குறிக்காது. அந்த சமயத்தில் வாழ்ந்த (பெண்கள் உட்பட) எல்லா மனிதர்களையும் குறிக்கிறது.

தேவனுடைய ஜீவன் கொடுக்கும் ஆவி மனிதர்களோடு "என்றென்றும்" தங்கியிருப்பதில்லை ஏனெனில் "அவனும் மாம்சந்தானே," "மாம்சம்" என்பதற்கு எபிரெயப் பதம் (בָּשָׂר, *baśar*, பாஸார்), இதற்கு பல அர்த்தங்கள் உள்ளன, எனவே இதன் சூழலில் புரிந்து கொள்ளவேண்டும்.[11] NIVயில் இந்த வார்த்தை "சாவுக்குரிய" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது மிகச் சிறிய அர்த்தத்தையே கொடுக்கிறது. மனிதனுடைய சாவுக்குரிய தன்மை எப்படி, தேவ ஆவி அவனோடு என்றென்றும் அவர்களோடு நிலைத்திருக்காமல் இருக்கக் காரணமாய் இருக்கமுடியும்? தேவன் மனிதனை சாவுக்குரியவனாக சிருஷ்டித்தார். ஜீவவிருட்சத்திற்கு செல்ல இயலாத போது அவன் சாவுக்குரியவனான மாறவில்லை, மாறாக அவன் ஏற்கனவே சாவுக்குரியவன். தன் வாழ்வைக் காத்துக்கொள்ள ஜீவ விருட்சத்தின் கனியைப்புசிக்க வேண்டியது அவசியம். ஏதேனிலிருந்து விரட்டப்பட்டபின் மனிதன் மரிக்க சாவுக்குரிய தன்மை காரணமாயிருக்கவில்லை. மரணம் வர அவனது பாவமே காரணம் ஜலப்பிரளயத்தின் நிழலில் மனுக்குலத்துக்கும் அப்படியே ஒரு சாவுக்குரிய நிலை தேவனுடைய ஆவி பிரிந்து செல்லவும் ஜலப்பிரளயத்தைக் கொண்டுவரவும் சாவுக்குரியது காரணமல்ல மாறாக, மனிதகுலம் ஒழுக்க நெறியிலும், ஆவிக்குரிய விதத்திலும் பெலவீனமானவன் "குறையுள்ளவன்," தவறிழைப்பவன்[12] பாவத்திற்கு சாய்ந்து போகக்கூடியவன். இந்த சூழலில் *பாசர்* என்பதின் பொருள் இதுவாகக் காணப்படுகிறது.[13]

3ம் வசனத்தின் மீதமுள்ளப் பகுதி **அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம்** மனிதன் வாழ்நாள் குறுகிப்போகக் காரணம் அவன் பாவத்தின் மீதும் அக்கிரமத்தின் மீதும் சாய்ந்ததால் தேவன் குலுக்கினார் என்று சிலர் கருதுகின்றனர். 5ம் அதிகாரத்தில் ஜலப்பிரளயத்திற்கு முன்பு உள்ளதைப் பதிவுச் செய்துள்ளபடி மனிதனின் ஆயுள் ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்த 900 வருடத்திலிருந்து 120 வருடமாக இருக்கவேண்டுமென தேவன் தீர்மானித்தாரா? இப்படிபட்ட பார்வை, உலகத்தின் அழிவின்

உடனடியான சூழல் என்ற போலியானதொருத் தோற்றத்தை யளிக்கிறது. இவ்வளவு நீண்ட காலம் தொடர்ந்து மக்கள் தீமையான எண்ணத்தோடும் செயலோடும் வாழ்வதை தேவனால் சகிக்கமுடியாது (6:5).

இரண்டாம் கருத்து 120 வருடம் என்பது, ஜலப்பிரளயத்திற்கு முன் காட்டப்பட்ட கிருபை இதில் "நீதியைப் பிரசங்கித்தவனாகிய" நோவா (2 பேதுரு 2:5) மனிதர்களுக்கு வருகின்ற நியாயத்தீர்ப்பைக் குறித்து பிரசங்கித்து அவர்களை மனந்திரும்புதலுக்கு நடத்த (காண்க 1 பேதுரு 3:19, 20) எச்சரிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தைக் காட்டுகிறது. பழைய ஒரு யூத வியாக்கியானம் இதனை சோதனைக்காலம் என வியாக்கியானிக்கிறது: "நான் அவர்களுக்கு ஒரு பருவத்தை [அல்லது நீண்ட காலத்தை] கொடுப்பேன், அவர்கள் மனமாற்றமடைய நூற்றிருபது ஆண்டுகள்."[14]

இரண்டாம் கருத்து சுலபமாக பொருந்தும், ஜலப்பிரளயத்திற்குப் பின் விரிவான சூழலில் தனிப்பட்டவர்களின் வாழ்நாள் 120 வருடங்களுக்கு அதிகமாகவும் இருந்துள்ளது. உதாரணமாக, பூமியின் மீது ஜலப்பிரளயம் ஏற்பட்டபோது நோவாவுக்கு 600 வயது (7:6), மற்றும் அவர் வயது 950 ஆகும் வரை வாழ்ந்தார் (9:29). ஆபிரகாம் 175 வருடங்கள் வாழ்ந்தார் (25:7), ஈசாக்கு 180 வருடங்கள் வாழ்ந்தார் (35:28), யாக்கோபு 147 வருடங்கள் வாழ்ந்தார் (47:28). யோசேப்பு 110 வருடங்கள் வாழ்ந்தார் (50:26), மோசே 120 வயதில் மரணம் அடையும் போதும் பலமுள்ளவராக இருந்தார் (உபா. 34:7), யோசுவா 110 வயது வரை வாழ்ந்தார் (யோசுவா 24:29), பிந்திய குழுவிலிருந்தவர்களில் ஆரோன் மட்டுமே 120 வயதுக்கும் வாழ்ந்தார் (எண். 33:39), 123ம் வயதில் மரணம் அடைந்தார் நோவாவுக்குப் பின் சராசரி ஆயுள் 120 என்பதே கணக்கு. இந்த விதி படிப்படியாக நடை முறைப்படுத்தப்படும்.[15] இன்னொரு பக்கத்தில் தேவன் தாம் பூமியில் ஜலப்பிரளயத்தைக் கொண்டுவருவதற்கு முன் மனிதருக்கு மனந்திரும்பக் கொடுத்த போதுமான கால அளவாக அநேக உண்மைகள் சுட்டிக் காட்டுகின்றன. இக்காலகட்டத்தின் பகுதியில் தேவன் நோவாவின் பிரசங்கத்தின் மூலம் மக்கள் மனந்திரும்ப அழைப்பார். இதனோடு சேர்த்து, நோவாவின் குடும்பத்தார் பேழையைத் தயாரிக்க சில காலம் வேண்டியிருந்தது, அது மிகவும் பெரியதாயிருந்தது (ஆகிய விளக்கங்களை காண்க 7:6, 7).

**வசனம் 4.** அந்நாட்களில் **இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்**, என்பது வியாக்கியானத்திற்குப் பிரச்சனையாயிருக்கிறது. KJV மொழிபெயர்ப்பு (נְפִלִים, *n^e^pilim*, நிப்பிலிம்) எபிரெய பதத்தை "அரக்கர்" என மொழிபெயர்ப்பு செய்துள்ளது. இது LXX எழுபதின்மார் மொழிபெயர்ப்பின் அடிப்படையில் வருகிறது (*γίγαντες*, *gigantes*, ஜிஜென்டீஸ்) இங்கு மட்டுமல்லாது எண்ணாகமம் 13:33 லும், நிப்பிலிம்

என வரும் மற்றுமொரு இடம், இந்த எபிரெய பதத்தின் மூலம் கேள்விக்குறியாகும்; ஒரு வேளை (נָפַל, *napal*, னபல்) (நப்பல்), இதன் வினைச்சொல் "விழுந்தது" என்ற பொருளைத்தரலாம். எப்படியிருப்பினும், இதற்கு எழுத்துப்படி "விழுந்துபோன ஒன்று"[16] எனலாம். "அரக்கர்கள்" அல்ல.

இன்றைக்கு நிப்பலிம் ஏன் பொதுவாக அரக்கர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது? இது எண்ணாகமம் 13:32, 33ல் இஸ்ரவேலர் கானானில் மக்களைக் குறிக்க பயன்படுத்திய சொல், இப்பதம் மிகைப்படுத்திச் சொல்லப்பட்ட வார்த்தையாகும். அவர்கள் "மக்கள் எல்லாரும்," தேசத்தில் அவர்கள் சந்தித்த எல்லாரும் "பெரிய உருவம் கொண்டவர்கள்" என்று சொன்னார்கள் அம்மக்களை ஒப்பிடும்போது அவர்கள் பார்த்தவர்களெல்லார் முன்னிலையில் இவர்கள் வெறும் "வெட்டுக்கிளிகள்" போன்றவர் என்கிறார்கள். பத்து வேவுகாரர்கள் பயத்தினாலும், அவி சுவாசத்தினாலும் கானானியர்களைக் குறித்து தங்களில் உள்ள வித்தியாசங்களை மிகைப்படுத்தினர். தீமோத்தேயு ஆர். ஆஸ்லெயின் கூற்றுப்படி, "வேவுகாரர்களின் சுய வர்ணனையான *வெட்டுக்கிளிகள்* (*அகாபீம்*) என்பது meiosis மீயோஸிஸ் என்ற அணியாகும், இது ஒரு பொருளின் தன்மையையோ அளவையோ குறைத்து, மற்றொன்றின் உருவத்தையோ அளவையோ மிகைப்படுத்துவதாகும்."[17]

கானானியரை சித்தரிக்க மிகைப்படுத்துதல் இருப்பினும், இது "நிப்பலீம்" என்பதற்கும் பெரிய உருவம் என்பதற்கும் எந்த தொடர்பும் இல்லை. எண்ணாகமம் 13:33 "ஏனாக்கின் குமாரர்கள்" "இராட்சதர்களையும்" இணைத்துச் சொல்கிறது. எபிரெய பதம் עֲנָק (*ʿanaq*, அனாக்) மூலத்தில் "கழுத்து" அல்லது "கழுத்தணி" என்று "அர்த்தப்படும் ஏனோக்கின் கோத்திரத்தின் பெயரானது 'நீண்டக் கழுத்துள்ள' என்றப் பொருளில் (= இராட்சதன்)."[18] வேறு பகுதிகள் ஏனாகியரும், ரெப்ஃபாமியரும் உயரமானவர்கள் என (உபா. 1:28; 2:10, 11, 20, 21; 9:2), சுதந்தரிக்கும் போது பாசானிலே ராஜாவாகிய ஓக் கடைசி ரெப்பீம், இவனது நீண்ட இரும்புக் கட்டிலுக்காக இவன் அறியப்படுகின்றான் (உபா. 3:11).[19] எருசலேமுக்கு 20 மைல் தெற்கே எபிரோனின் அருகில் ஏனாக்கியர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களை காலேபும் யூதேயாவினரும் மேற்கொண்டனர் (யோசுவா 14:13-15; 15:13, 14; நியா. 1:20) பின்பு இஸ்ரவேலர்களின் இராஜாக்களின் காலத்தில் தாவீது பெலிஸ்தியனான கோலியாத்தை மேற்கொண்டார் (1 சாமு. 17:4-7, 41). வேறு சில இராட்சதர்கள் அந்த காலத்தைத் தொடர்ந்து குறிப்பிடப்பட்டுள்ளனர் (2 சாமு. 21:16, 18, 20, 22; 1 நாளா. 20:4, 6, 8).

நிப்ஃலீம் 6:4ல் வரும் இராட்சதர் சரீரப்பிரகாரமான பெலவான்களாக இருந்திருக்க முடியும், வசனப்பகுதி அதைக்காட்டிலும்

மிக முக்கியமான ஆவிக்குரிய விளக்கத்தைத் தருகின்றது. பாவத்துடன் பிரச்சனையைக் கொண்டிருந்தனர். அவர்களின் பெயருக்கு ஏற்றாற் போன்றே. அவர்கள் "விழுந்த நிலையில்" செய்யப்பட்டிருக்க வேண்டும், அதாவது தீமைச் செய்வதினால் கெட்டுப்போயிருந்தனர்.

நீப்பலீம் மிக புகழ் மிக்க காலக்கட்டத்தை சுட்டிக்காட்டுகிறது. இந்தக் காலக்கட்டத்தில் **தேவகுமாரர்கள் மனுஷ குமாரத்திகளிடத்தில் வந்தனர்.** அவர்களுக்கு பிள்ளைகள் பிறந்தனர் (காண்க 6:2). சில மொழிபெயர்ப்புகள் நிப்பலீம்கள் இந்த சேர்க்கையினால் வந்த சந்ததி என்பர் (TEV; CEV; NLT; NJPSV).[20] ஆனால் இது சந்தேகத்திற்குரியது. நீப்பலீம் "தேவ குமாரர்களின்" மற்றும் "மனுஷ குமாரத்திகளின்" சமக்காலத்தவர்கள் என்று வசனப்பகுதி கூறுகிறது.

வசனம் சொல்கிறது, "அந்நாட்களில் இராட்சதர் பூமியில் இருந்தார்கள்," மற்றும் **பின்பும் கூட** இந்தப் பதம் "பின்பு" என்பது இரண்டு வழிகளில் புரிந்துகொள்ளப்படுகிறது. இராட்சதர்கள் நீண்ட காலம் தொடர்ந்து இருந்திருக்கலாம் என அர்த்தமாவது மட்டுமல்லாமல், தேவன் ஜலப்பிரளயத்தை அனுப்புகிறவரைக்கும் ஒருவேளை இருந்திருக்கக்கூடும். இன்னொரு பார்வை என்ன வெனில் இராட்சதர்கள் ஜலப்பிரளயத்திற்கு முன்பு மட்டுமல்ல பின்பும் இருந்திருக்கலாம் என்பதை சுட்டிக்காட்டுகிறது (காண்க எண். 13:33). ஒருவேளை பிந்தியக்கருத்து சரியாக இருக்கும் பட்சத்தில் வாசகர் மனதிலிருக்கவேண்டியது என்னவெனில் பிந்திய இராட்சதர்கள் முந்தியிருந்தவர்களின் வழிவந்தவர்கள் அல்ல என்ற கருத்தாகும். நோவாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தவிர மற்ற யாவரும் ஜலப்பிரளயத்தில் மாண்டுப்போயினர்.

வசனம் 4 முடிவாகச் சொல்கையில், **இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்.** "இவர்கள்" என்று சொல்லப்படுவது யாரைக் குறிக்கிறது? மூன்று சாத்தியக் கூறுகள் "குமாரர்கள்": "தேவனுடையக் குமாரர்கள்"; மற்றும் "இராட்சதர்கள்." சாத்தியக்கூறு யாதெனில் வசனத்தின் தொடக்கத்தில் வரும் "இராட்சதர்களுடைய" தொடர்பு தொடர்ந்து வருகிறது. "பல வான்களாகிய மனிதர்கள்" (גִּבֹּרִים, *gibborim*, கிப்பொரிம்) என்ற பதம் யுத்த வீரர்களுக்கே பொதுவாக இப்பதம் பொருத்தமாக இருக்கும். தாவீதின் "பராக்கிரமசாலிகள்" (2 சாமு. 10:7; 16:6; 20:7; 23:8-39) 4ம் வசனத்தில் வரும் "பலவான்கள்" என்போர் தாவீதுக்காகவும் அவரது ராஜ்ஜியத்திறகாகவும் யுத்தம் செய்த யுத்த மனிதர்களை விட வித்தியாசமானவர்கள். இங்கு குறிக்கப்படுபவர்கள் முற்றிலுமாக விவரணை செய்திட இயலாதவர்கள். கொலை செய்யும் கலையை ஏற்படுத்தியவர்களாவார்கள். இவர்கள் "பேர் பெற்றவர்கள்," எழுத்துப்படி "புகழ் பெற்ற மக்கள்" (אַנְשֵׁי הַשֵּׁם, *'an<sup>e</sup>shey hashshem*, அனெஷெய்கஷ்ஷெம் என்ஷியஷிஷிஎம்). அவர்கள் அழிவுச்

செய்யக்கூடிய தீய (துன்மார்க்கர்) மனிதர்கள்.

## மனிதனின் துன்மார்க்கமும் தேவனின் நியாயத்தீர்ப்பும் (6:5-7)

**5மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, 6தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. 7அப்பொழுது கர்த்தர்: நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம் பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது. என்றார்.**

இந்தப் பகுதி இறையியல் ரீதியாக மிக முக்கியமான வசனம். இது ஜலப்பிரளயத்திற்கு முன் (1) மனிதனின் இருதயத்தில் என்ன நடந்துகொண்டிருந்தது எனவும், (2) மனிதனின் துன்மார்க்கத்திற்கு தேவனின் மனப்பாங்கின் மாறுதாரம், மற்றும் (3) அழிப்பதைப் பற்றி தேவனின் தீர்மானத்தின் காரணம்.

**வசனம் 5. கர்த்தர் கண்டு** என்ற பதம் மனிதரின் விவகாரங்களில் தேவன் அக்கறையுள்ளவரும் தலையிடுகிறவருமாயிருக்கிறார் என்பதை பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார் (காண்க 29:31; யாத். 2:25; 3:4; 4:31). இந்த வார்த்தை தேவனின் 1:31ன் கூற்றை நினைவுபடுத்தினதைப் போன்றது. "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது," 1:31. எப்படியிருப்பினும், எதிரெதிரான ஒப்பீடு பெரிதாயிருக்க முடியாது: மாறாக அங்கீகாரத்தோடு பார்ப்பதற்குப் பதிலாக இப்போதோ அவர் **மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது** என்று காண்கிறார்.

மனிதனைப் பொறுத்தவரை இந்த ஒழுக்கக்கேடு திடீரென ஏற்பட்ட ஒரு மாற்றமல்ல; இது நீண்ட காலமாக நடக்கும் ஒரு பழக்கம். ஆசிரியரின் அடுத்த கூற்று இதை உறுதிப்படுத்துகிறது: **அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே.** மனிதனைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட பாவம் திடீரென விபத்தைப் போல் வந்ததல்ல. இது திட்டமிடப்பட்ட, வேண்டுமென்றே செய்கிற மற்றும் வழக்கமாகச் செய்வதாக இருந்தது. விழிப்பாக இருக்கும் ஒவ்வொரு மணி நேரமும், மனிதன் தன் இருதயத்தில் தீமையைத் திட்டமிட்டு தன்னையும தன்னைச் சேர்ந்தவர்களையும் பட்சிக்கும் அளவுக்கு அவனை அழித்தது.

ஆதியாகமம் 3ல் மனிதனின் வீழ்ச்சியின் பதிலையும் ஜலப் பிரளயத்தின் காரணத்தையும் ஆசிரியர் இணைத்தார். இங்கே ஆசிரியர் ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறார். ஏதேனில் ஆதாமும் ஏவாளும் "நன்மை தீமை" யைப்பற்றிய அறிவை விரும்பினார்கள் (3:5, 22). அவர்களின் புதிய அறிவு ஆசீர்வாதத்தை கொடுக்க வில்லை. மாறாக தங்களுக்கும் தங்களின் பின்னடி யாருக்கும் துன்பத்தை விட்டுச் சென்றனர். புதிய வழிமுறைகளில் திட்டமிட்டுத் தீமைகளை செய்வது மனிதனின் சுபாவம் அது நன்மை செய்ய வேண்டுமென்ற விருப்பத்தை மேற்கொள்ளுகிறது.

**வசனம் 6.** மூர்க்கமான துன்மார்க்கத்திற்கு தெய்வீக மாறுத்தரம் பின்வருமாறு உள்ளது: **தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்**; இவ்வசனம் சிலருக்கு KJV மொழிபெயர்ப்பில் பிரச்சனை உள்ளது. (தமிழ் வேதாகமம், பவர் மொழிபெயர்ப்பு கிட்டத்தட்ட KJV மொழிபெயர்ப்பை ஒட்டியே வருகிறது.) தேவனுக்கு பாவம் செய்வதோ பொய் சொல்வதோ கூடாதகாரியம் என வேதத்தில் பிற பகுதிகள் கூறுகின்றன. எனவே அவர் மனஸ்தாபப்பட அவசியமில்லை. எண்ணாகமம் 23:19 "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல" (காண்க 1 சாமு. 15:29). 6:6ல் வரும் எபிரெய வினைச்சொல் (נָחַם, *nacham*, நாச்சம்). எடுத்துக்காட்டாக, பாவத்திற்காக தேவன் ஒருபோதும் குற்றப்பட்டிருப்பதில்லை எனவே தேவனுக்கு இது பயன்படுத்தப்படும் போது "மனஸ்தாபப்பட்டார்" என்று சொல்லும் போது பொருள் வித்தியாசப்படுகின்றது. இருந்தாலும் இது தேவனைப் பொருத்து உண்மை, "துக்கப்பட்டார்" (NIV), என்ன நடந்ததோ அதற்காக "அவர் வேதனைப்பட்டார்" அல்லது "வருத்தப்பட்டார்" என்று பொருள் கொள்ளலாம்.[21]

தேவனது சித்தத்திற்கு தம்மை ஒப்புக் கொடுப்பதைப் பொறுத்து அவர் மனிதர்களுக்காக தம் மனப்போக்கையும், திட்டங்களையும் மாற்றுகின்றார். இதற்கு தேவன் நிலையில்லா (சலனப் புத்தியுடையவர்) தன்மையுடையவர் என்று பொருள் கொள்ள லாகாது. மனிதனின் மாறுத்தரத்தைப் பொறுத்து தேவனின் இராஜத்துவம் கூட்டுறவாகிறது என்று இது காட்டுகிறது (காண்க யாத். 32:12-14; 1 சாமு. 15:11, 22-29; எரே. 18:6-10; யோனா 3:4-10). ஆதியிலே, மனிதர்களை ஆசீர் வதிப்பதே தேவனின் விருப்பமாகும். இதனை அவர் செய்ததை (1:27, 28). அவர் செய்த எல்லாமே "நன்றாயிருந்தது" (1:4, 12, 18, 21, 25) - உண்மையில் "மிக நன்றாயிருந்தது" (1:31). ஆதாமும் ஏவாளும் சர்ப்பத்திற்குச் செவிகொடுத்துப் பாவம்செய்த போது தேவனது தொடர்ச்சியான ஆசீர்வாதங்களுடன் சாபமும், அபராதமும் செயல்படத் தொடங்கின (2:17; 3:14-19, 22-24).

நீண்ட நெடிய காலத்திற்குப்பின், மனிதர் துன்மார்க் கரானார்கள்,

அவனது எண்ணமும் செயலும் தொடர்ந்து தீயதாகவே இருந்தது இதன் பலனாக **தேவன் தம் மனதிலே துக்கம் கொண்டார்.** இது தேவனது உணர்விலே துயரத்தைக் கொடுத்தது. இதன் காரணமாக அவர் தம் மனதை மாற்றிக்கொண்டு ஜலப்பிரளயத்திற்கு முந்தின உலகத்திற்கு சரீரப்பிரகாரமான சாபத்தைக் கொடுத்தார்: அது மரணம் 6ம் வசனத்தின் முன் பகுதியில் (עָצַב, *'atsab*, அட்சாப்), மனஸ்தாபப்பட்டார் என்பதின் வினைச்சொல் *நாச்சம்* என்பதின் பொருளுக்கு ஒத்து வருகின்றது. இது "சரீர வலி மற்றும் உணர்வுப்பூர்வமான துக்கத்தை" குறிக்கும்[22]; பின்னால் உள்ள பொருள் தேவனது துக்கத்தை வெளிப்படையாகக் காணலாம்.[23]

மனுக்குலத்துக்கு தேவனது மறு மொழியான மனஸ்தாபம் என்பது சிருஷ்டிப்பு தெய்வீக தவறு என்பதினால் அல்ல. மனிதனின் புரட்டும் பாவமுமே இதன் ஆதாரம். அது அவனுக்குள்ளிருக்கும் தேவனுடைய சாயலை அழித்துப் போட்டது. மனிதனை சிருஷ்டித்தது தவறல்ல; தன் சுயாதீனத்தை மனிதன் பலவிதங்களில் தவறாகப் பயன்படுத்தி தன்னைத்தான் கொடுமையான துஷ்டனாக்கினான். தேவன் ஆளுக்குரிய தேவனாக இருப்பதால் தமக்கு பிரியமானவர்கள் தம்மைக் காட்டிக்கொடுக்கும்போதும், அவர்களையே கனவீனப்படுத்தும்போதும், உடன் மனிதர்களை தவறாகப் பயன்படுத்தும் போதும் அவர் வலியை உணர்கிறார் (காண்க ஒசியா 11:1-8). இது தான் தேவனுடைய இருதயத்தில் சொல்ல முடியாத வேதனையையும் துக்கத்தையும் ஏற்படுத்தியது.

**வசனம் 7.** இந்த வேளையில், **கர்த்தர்** தம் முடிவை பிரகடனம் செய்கிறார் **நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், … நிக்கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார்.** "நிக்கிரகம் பண்ணுவேன்" என்னும் பதம் (מָחָה, *machah*, மக்கஹ), உண்மையிலே "துடைத்துப்போடுதல்" என்றுப் பொருள்படும்[24] பழங்காலத்து எழுதுகின்ற சுருளில் உள்ள மையை துடைத்துப் போடுதல் அல்லது கிறுக்கிப் போடுதல் எனப் பொருள்படும். இஸ்ரவேலர்கள் பொன் கன்றுக்குட்டியை தொழுது பாவம் செய்தபின் அவர்களுக்காக மோசே பரிந்து பேசும் போது பயன்படுத்தின அதேப்பதம். அவர்கள் பாவங்களை மன்னிக்க வேண்டிக் கெஞ்சும் போது சொல்கிறார்: "இல்லாவிட்டால், நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்" (யாத். 32:32). மக்களுடைய அக்கிரமத்தினிமித்தமாக தேவன் யூதாவுக்கும் எருசலேம் நகரத்துக்கும் எதிராக நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும்போது பட்டணத்தை துடைத்துப்போட இருந்ததை, "ஒருவன் ஒரு தாலத்தைத் துடைத்துப் பின்பு அதைக் கவிழ்த்துவைக்கிறதுபோல எருசலேமைத் துடைத்துவிடுவேன்" (2 இராஜா. 21:13) என்றார்.

மனிதனுடைய பாவத்தின் நிமித்தம் தேவனின் துக்கம் அவரின் அழிவைப்பற்றிய அவருடைய கூற்றில், **மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் அழிவு சென்றடையும்**; உலகத்தின் சிருஷ்டிப்பின் வரிசையில் தேவனின் ஆதித்திட்டத்தை மறுபடியும் சீர்ப்படுத்த இயலாதபடி உருக்குலைந்து, திரித்துவிட்டது. முதல் மனிதனும் மனுஷியும் பாவம் செய்தபோது, எல்லா மனுக்குலமும் சாபத்தைப் பெற்றனர், மற்றும் பாவத்தின் விளைவாக மரணம் வந்தது. மனிதனின் அக்கிரமத்தினால் பூமி தீட்டுப்பட்டது, அதினால் மிருகங்கள், ஊரும் பிராணிகள், பறவைகள் அனைத்தும் ஜலப்பிரளயத்தை அனுபவிக்க வேண்டியிருந்தது. மனிதனின் பாவாத்தின் தீட்டை ஜலப்பிரளயம் சுத்தப்படுத்தியது.

6:5-7ல் மனிதனைக் குறித்த மனமுடைந்த விளக்கத்திறகுப் பின் நம்பிக்கையின் ஒளிக்கீற்று ஒன்று வெளிப்படுகிறது. “அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே” (6:5) என்பது பூமியில் உள்ள எல்லாருக்கும் பொருந்தாது; நோவா விதிவிலக்காக இருந்தார்.

## நீதிமானாகிய நோவா சீரழிந்த உலகத்துக்கு மாறுபட்டவர் (6:8-12)

**[8]நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. [9]நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். [10]நோவா சேம் காம் யாப்பேத் என்னும் மூன்று குமாரரைப் பெற்றான். [11]பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. [12]தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின் மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள்.**

**வசனம் 8. ஆனால்** (கோ) என இந்த வசனம் தொடங்குகிறது, இது தேவன் **நோவாவில்** துன்மார்க்க உலகில் வித்தியாசமான ஒரு நடத்தையின் தன்மையைக் கண்டார் **நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது**. NEB மொழிபெயர்ப்பின் வசனம், “நோவா தேவனிடம் தயவை வென்றார்,” ஏனெனில் இவர் “நீதிமானும்,” “உத்தமனுமாயிருந்தார்” (6:9) இந்த மொழிபெயர்ப்பு நோவா நீதிமானாயிருந்ததினால் தேவனின் கண்களில் தயவைப்பெற்றான் என்ற ஒரு கருத்தைக் காட்டுகிறது, இப்படிப்பட்ட ஒரு புரிந்துக் கொள்ளுதல் தவறானதாகும். மனிதனுடைய நீதியினிமித்தம் அவனுக்கு தயவைக் காட்ட தேவன் ஒரு போதும் கடமைப்பட்டவரல்ல. எந்த மனுஷனும் முழுமையான நீதிமானோ, குற்றமற்றவனோ,

பாவமில்லாதவனோ அல்ல (சங். 14:1-3; 130:3; நீதி. 20:9; ரோமர் 3:23), இரட்சிப்பு எப்போதுமே தேவனுடைய கிருபையை சார்ந்தது (ரோமர் 4:1-5; எபே. 2:8-10) இங்கு "தயவு" என்று வருகிறது (חֵן, *chen*, சென்), என்பது கிருபை எனவும் மொழிபெயர்க்கலாம் (தமிழ் பவர் மொழிபெயர்ப்பில் கிருபை எனவே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) ஏனெனில் இது "இலவசமாகக் கொடுக்கப்படுகின்றது."[25] இன்னொரு வகையில் சொல்வதானால் இதனை சம்பாதிக்கவோ, புண்ணியத்தினால் பெறவோ இயலாது. வசனம் சொல்கிறது "நோவா தேவனுடைய கண்களில் தயவை [அல்லது கிருபையை]ப் பெற்றுக்கொண்டான்." இந்தக் கிருபை நோவா பெற்றுக்கொண்ட ஒரு கொடை. இது இவர் சுய முயற்சியினால் சம்பாதித்ததோ, சாதித்ததோ அல்ல. அவரது விசுவாசத்தினால் தேவனுடையக் கிருபையைப் பெற்றுக்கொள்ளும் நிலையில்இருந்தார்.

**வசனம் 9.** நோவாவைப் பற்றிய விரிவான நிகழ்வுகளுடன் துவங்கும் இப்பகுதி ஆதியாகமம் 1-11, இப்புத்தகத்தின் நடுப்பகுதி. எபிரெய பதம் (תּוֹלְדֹת, *toledoth*, டொலிடோ) 2:4ல் பார்த்ததுபோல் "வம்சவரலாறு," "குறிப்பு" அல்லது "உடைய சரித்திரம்" என அர்த்தப்படுகிறது, ஆனால் NASB இரண்டு பொருளை டொலிடோத் என்ற பதத்திற்குப் பயன்படுத்துகிறது: ஆவணம் மற்றும் தலைமுறைக்குகள் இரண்டு கருத்துக்களும் தொடரும் குறிப்புகளில் காணப்படுகிறது. 6:9-11:32 பகுதியானது **நோவா** முதல் ஆபிரகாம் வரைக்கும் உள்ள வம்சவரலாறு மற்றும் வம்சாவழியைக் குறித்து சரித்திரத்தை பதிவு செய்கிறது.

இந்த சூழலில் நோவா தன் சமகாலத்தவர்களான துன்மார்க்கர் நடுவில் **நீதிமானாய்** தனித்து நிற்கிறதைக் காண்கிறோம். ஆமோஸின் கூற்றுப்படி இவர் நீதிமானென்றால் இவர் மற்றவர்களை நீதியாக நடத்தியுள்ளார். தீர்க்கதரிசி இப்பதத்தை பலபொருள் கொண்ட ஒரே சொல்லாக பயன்படுத்துகின்றார். ஆமோஸ் 5:24ல் "நியாயம் தண்ணீரைப்போலவும், நீதி வற்றாத நதியைப்போலவும் புரண்டு வரக்கடவது." தவறாகப் பயன் படுத்தப்படுதல், ஒடுக்குதல், ஏழைகளை சாதகமாகப் பயன்படுத்துதல் போன்றவற்றிற்கு எதிராக குற்றம்சாட்டி இந்த வசனம் பேசுகின்றது (ஆமோஸ் 5:11, 12). மீகா 6:8ல் "நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை" தேவன் தனிப் பட்டவர்களிடம் எதிர்பார்க்கிறார் என மீகா சொல்கிறார். தேவனிடத்திலும், மனுஷரிடத்திலும் சரியான நோக்கமும், செயல்பாடுமே நீதியாயிருப்பதாகும் என இன்னொரு வகையில் கூறலாம். இது நோவாவின் வாழ்வில் உதாரணமாகும். நிச்சயமாகவே, நோவா "நீதியை" (செம்மையானதை) செயல் படுத்தினார், தாழ்மையாக தேவனோடு நடந்தார். நோவாவின் நீதியான பக்தி பின்நாட்களில்

எசேக்கியேல் 14:14, 20லும், மேலும் புதிய ஏற்பாடு அவரை "நீதியின் பிரசங்கி" என அழைக்கிறது (2 பேதுரு 2:5).

நோவா தன் காலத்தில் **இருந்தவர்களுக்குள்ளே உத்தமனுமாயிருந்தான்**; என அறியப்பட்டது மனிதனாக **தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான்**. உத்தமனாயிருந்தான் என்பதினால் அவன் பாவம் இல்லாதவனாயிருந்தான் என்று பொருளல்ல எபிரெய பதம் (תָּמִים, *thamim*, தமிம்) எபிரெய பதத்தின் பொருள் பாவமில்லாமல் வாழ்வது என்றோ, அறநெறியில் பூரணமாயிருப்பதென்பதோ அல்ல; "நிறைவான" அல்லது "முழு இருதயம்" ஒருவர் "தேவனுக்கு அவருடைய எதிர்பார்த்தலுக்கு அர்ப்பணிப்பதைப்" பொறுத்தது என்று அர்த்தப்படுகிறது.[26] முழுமையாக தேவனுக்கு அற்பணிப்பு என்ற இந்தக் கருத்து தேவனுக்கு முழு அற்பணிப்புச் செய்ய தீர்மானித்த நோவா "தேவனோடு நடந்தான்" என வலியுறுத்தப்படுகிறது. எல்லாவற்றையும் ஆராயும் போது நோவா உயர்ந்த சன்மார்க்க நீதியும் நேர்மையுமானவன் என காட்டுகிறது. அவன் தேவனுக்கு உண்மையுள்ளவன், சகமனிதர்களின் விவகாரங்களில் நேர்மை யானவன். பூமியில் துன்மார்க்கம் பரந்து விரிந்துக் கிடக்கும் போது அதற்கு எதிரிடையாக இவர் தன் சிருஷ்டிகருக்கு மகிமையைக் கொண்டுவரும்படி தன் மனப்பாங்கிலும் வாழ்க்கை முறைகளிலும் இவன் தேவனோடு நடந்தார்.

**வசனம் 10.** இந்த வசனம் **நோவா சேம் காம் யாப்பேத் என்னும் மூன்று குமாரரைப் பெற்றான்** (காண்க 5:32) என்று சொல்கிறது, இங்கு இவர்களின் பெயர் ஏன் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று புரியாத புதிராக உள்ளது. இருக்கக்கூடிய பல விளக்கங்கள் முன்வைக்கப்பட்டிருக்கிறது. (1) ஒருவேளை ஆசிரியர் மற்ற மனிதக்குலத்தின் துன்மார்க்கத்தை மேலும் விளக்குவதற்கு முன் குமாரர்கள் மூவரும் வித்தியாசமானவர்களென அடையாளப்படுத்த விரும்பினார். இதன் மூலம் வாசகர் ஏன் இந்த மூவரும் ஜலப்பிரளயத்திற்கு தப்புவிக்கப்பட்டனர் எனப் புரிந்து கொள்வார்கள். (2) ஆசிரியர் நோவாவை ஆதாமோடும் தேராவோடும் சம்மந்தப்படுத்தவே, இவர்கள் ஒவ்வொருவருக்கும் மூன்று பிள்ளைகள் பிறந்தனர், வரலாற்றின் மிக முக்கியமான திருப்புமுனையில் இவர்கள் வாழ்ந்தனர். (3) சேம், காம், யாப்பேத் ஆகியோரைக்குறித்த குறிப்பு அடைப்புக்குள் வருகிறது: நோவாவின் மூன்று குமாரர்கள் (6:10), பேழைக்குள் சென்றவர்கள் (7:13), ஜலப்பிரளயத்திற்கு தப்பினார்கள் (9:18). இவர்கள் தேவனுக்குப் பயப்படுகின்ற மனிதர்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் இந்த கதையில் நோவாவே முன்னிலை வகிக்கிறார்.

**வசனங்கள் 11, 12. பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது**, எனப் வசனம் சொல்கிறது. "பூமி" என்ற பதம் 6:11-13 வரை ஆறு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. எபிரெய

பெயர்ச்சொல் שָׁחַת (*shachath*, ஷக்ஹத்) மூன்று முறை "சீர்கெட்டுப்போனதாகவும்," "அழிவு" என ஒரு முறை, இந்த வசனத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. *ஷக்ஹத்,* "அழித்தல்," "கெடுத்தல்," "உருக்குலைத்தல்" என சுழலுக்கு ஏற்றார்போல் பல பொருள்கொண்டது (காண்க எரே. 13:7; 18:4; NIV). 6:13ஐ தற்கால மொழிபெயர்ப்புகள் எல்லாம் "மனிதக்குலத்தை" "பூமியோடு" "அழிப்பது" *(ஷாக்ஹத்)* தேவனுடைய தீர்மானம் என்பதாய் அறிவிக்கிறது. ஏனெனில் மக்களால் பூமி "கொடுமையினால்" "நிறைந்திருந்தது" அதே ஷக்ஹத், என்ற வார்த்தை பூமியின் நிலையை விளக்கப்பயன்படுத்தப்பட்ட வார்த்தை - **எல்லா மாம்சமும்** என்ன செய்து கொண்டிருந்தது. அவருடைய சிருஷ்டிப்பின் மீது எப்படி நியாயத்தீர்ப்பை கொண்டுவர தேவன் தீர்மானித்தார். இந்த திரும்பத் திரும்ப சொல்கின்ற காரியம், மனிதன் "ஒழுக்கத்திலிருந்து சுயமாக அழிந்தது" அல்லது "முன்னதாகவே சுயமாக அழிய"[27] தொடங்கியது. எனவே மனிதனை அழிக்க தேவனின் திட்டத்தைக் காட்டுகிறது.

**பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது.** என்றக் கூற்றைத் தவறவிடலாகாது. தேவனின் மூல திட்டம் மிருகங்களும் மனிதர்களும் "பலுகிப் பெருகி பூமியை நிரப்ப" வேண்டுமென்பதே (1:22, 28). மறுசிருஷ்டிப்பினால் பூமியில் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருவதற்கு பதிலாக மனிதகுலம் கொடுமையினால் நிறைத்தது மட்டுமல்லாது அது பெரும் அழிவை ஏற்படுத்தி அழித்தது *(ஷக்ஹத்)* பூமியில் வாழும் எல்லா உயிர்களுக்கும் பயங்கரமான சாபத்தைக் கொண்டு வந்தனர்.

"கொடுமை" (חָמָס, *chamas*, சமஸ்) என்று 11ல் வருவது பயங்கரமான அழிவு, இரத்தம் சிந்துதல் (கொலை), கற்பழிப்பு, நசுக்குதல், மேலும் மற்ற குற்றங்கள் போன்றவற்றால் பூமி தீட்டுப்பட்டுள்ளது அதில் குடியிருக்கும் பாவிகளுக்கு தேவனின் நீதியான தண்டனை உண்டு (6:11, 13; 49:5; நியா. 9:24; காண்க லேவி. 18:29; 20:11-18; எரே. 13:22). இப்படிப்பட்ட வாழ்க்கை முறையில் நோவா நீதியும் நியாயத்தையும் கைக்கொண்டார். இதனையே தேவனும் தம் மக்களிடம் விரும்புகிறார் (எரே. 22:3; எசே. 45:9).[28] சங்கீதம் 11:5ல் ஆசிரியர் சொல்கிறார், *சாமாஸ்* என்பது தீமையும் தேவனுடைய சுபாவத்திற்கும் அவர் மனிதன் இப்படித்தான் வாழ வேண்டுமென்கிற வழிகளுக்கும் எதிரானது என்கிறார். கர்த்தர் இந்த வாழ்க்கை முறையை வெறுக்கிறார் மேலும் இப்படி செயல்படுகிறவர்களுக்கு எதிராக தம் கோபத்தை செயல்படுத்துகின்றார் (எசே. 7:23, 24; 8:17, 18; 12:19, 20; 28:16; செப். 1:9).[29]

## பெருவெள்ளம் குறித்த தேவனின் அறிவிப்பும் பேழையைக்கட்டுவதற்கான கட்டளைகளும் (6:13-22)

**13அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின்
முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால்
நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவேன்.
14நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; அந்தப்
பேழையிலே அறைகளை உண்டுபண்ணி, அதை உள்ளும் புறம்புமாகக்
கீல்பூசு. 15நீ அதைப் பண்ணவேண்டிய விதம் என்னவென்றால்,
பேழையின் நீளம் முந்நூறு முழமும், அதின் அகலம் ஐம்பது முழமும்,
அதின் உயரம் முப்பது முழமுமாய் இருக்கவேண்டும். 16நீ பேழைக்கு ஓர்
ஜன்னலை உண்டுபண்ணி, மேல்தட்டுக்கு ஒரு முழத் தாழ்த்தியிலே
அதைச் செய்துமுடித்து, பேழையின் கதவை அதின் பக்கத்தில் வைத்து,
கீழ் அறைகளையும், இரண்டாம் தட்டின் அறைகளையும், மூன்றாம்
தட்டின் அறைகளையும் பண்ணவேண்டும். 17வானத்தின் கீழே
ஜீவசுவாசமுள்ள சகல மாம்சஜந்துக்களையும் அழிக்க நான்
பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணுவேன்; பூமியிலுள்ள
யாவும் மாண்டுபோம். 18ஆனாலும் உன்னுடனே என் உடன்
படிக்கையை ஏற்படுத்துவேன்; நீயும், உன்னோடேகூட உன் குமாரரும்,
உன் மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும், பேழைக்குள்
பிரவேசியுங்கள். 19சகலவித மாம்சமான ஜீவன்களிலும் ஆணும்
பெண்ணுமாக வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உன்னுடன்
உயிரோடே காக்கப்படுவதற்கு, பேழைக்குள்ளே சேர்த்துக்கொள்.
20ஜாதிஜாதியான பறவைகளிலும், ஜாதிஜாதியான மிருகங்களிலும்,
பூமியிலுள்ள சகல ஜாதிஜாதியான ஊரும் பிராணிகளிலும், வகை
ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உயிரோடே காக்கப்படுவதற்கு
உன்னிடத்திலே வரக்கடவது. 21உனக்கும் அவைகளுக்கும் ஆகாரமாகச்
சகலவித போஜனபதார்த்தங்களையும் சேர்த்து, உன்னிடத்தில்
வைத்துக்கொள் என்றார். 22நோவா அப்படியே செய்தான்; தேவன்
தனக்குக் கட்டளையிட்ட படியெல்லாம் அவன் செய்து முடித்தான்.**

நோவாவிடம் முதல் நான்கு தெய்வீக உரைகள் ஜலப் பிரளயத்தைக் குறித்து வருவது 6:13-21 வரை அடங்கியுள்ளது.[30]

**வசனம் 13. நோவாவிடம் தேவன்** நடத்தையின் அடிப்படையில் **உலகத்தின் கொடுமையை** சொல்லி பேசுகின்றார். துன்மார்க்கமான மனித குலத்தையும் **பூமியின்** மேலிருக்கும் **எல்லா மாம்ச** ஜீவன்களையும் **அழிக்க** தீர்மானமாயிருக்கிறார். மனுக்குலத்தின் கொடூரத்தின் காரணமாக தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிச்சயமானதாயிருந்தன. ஆதியில் மனிதனின் வீழ்ச்சியினால் இயற்கையும் மிருக ராஜ்ஜியமும் பாதிக்கப்பட்டிருந்தது (3:17-19; காண்க ரோமர் 8:20, 21) ஆகவே

இப்போது மனிதனின் பாவத்தினால் அவையும் பாடுபட வேண்டியதாயிருக்கிறது.

பழங்கால மெசபொத்தோமியாவிலிருந்து தப்பித்த பாழான ஜலப்பிரளயக் கதைகளுக்கு நேர் எதிரிடையாக ஜலப்பிரளயத்தைக் குறித்த வேதாகம சம்பவம் நிற்கிறது. இந்த புராணக் கதைகள் ஒன்றில் என்ற கடவுள் பூமியின் மீது வரவிருக்கிற ஜலப்பிரளயத்தைக் குறித்து அத்திரஸிஸை எச்சரிக்கிறார். ஜலப்பிரளயத்தின் காரணம் என்னவெனில் பூமியிலே மக்கள் கடவுளர்கள் தூங்கவிடாதபடி மிகுந்த சத்தமிட்டுக் கொண்டிருப்பதால் அவர்களை அழிப்பார்[31] - பாவத்திற்கான தண்டனையாக அல்ல.

**வசனம் 14.** தேவன் நியாயத்தீர்ப்பைப் பற்றிய அறிவிப்பிற்குப்பின் தொடர்ந்து அவரால் தேர்வு செய்யப்பட்ட சிலரை வரும் அழிவுக்கு விலக்க ஒரு திட்டத்தைக் கொண்டிருந்தார். அந்த சிலர் வரப்போகிற ஜலப்பிரளயத்தில் பயணிக்கவும், பாதுகாப்பாக இருக்கவும், ஒரு சிறப்பான பேழையைத் தயாரிக்க நோவாவுக்கு கட்டளையிடுகிறார். இதை **பேழை** (תֵּבָה, *thebah*, தீபா)[32] என NASB மொழிபெயர்ப்புச் செய்துள்ளது, இப்பதம் ஆதியாகமம் 6-9 வரை 26 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. பெரும் வெள்ளம் பூமியைச் சூழ்ந்திருந்த போது ஒரு வருடத்திற்கும் மேலாக நோவாவும் அவர் குடும்பமும், விலங்குகளும் தங்கியிருந்த மிகப் பெரிய கப்பல் இப்பதம் யாத்திராகமம் 2:3, 5ல் மோசேயின் தாய் அவனை கிடத்தியிருந்த சிறியப்படகுப் போன்றது. அது நைல் நதியின் நாணல்களுக்கு நடுவில் மிதக்கவிடப்பட்டது. எபிரெய ஆண் குழந்தைகள் கொல்லப்பட வேண்டுமென்ற சட்டத்தினால் மரணத்திற்கு விலகி காப்பாற்றப்பட்டார்.[33]

நோவா **கொப்பேர் மரத்தினால்** (גֹּפֶר, *goper*, கொபெர்), பேழையைச் செய்தார், இந்த எபிரெய பெயர் மொழிபெயர்ப்புச் செய்யப்படாமல் சொல்பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே இப் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. κυπάρισσος (*kuparissos*) குபரிஸ்ஸோஸ் என்ற கிரேக்கச் சொல்லோடு நெருங்கியத் தொடர்புகொண்டதாக இருக்கலாம். இது “cypress” “சைப்பிரஸ்” என அர்த்தப்படுகிறது (NIV; NEB; NRSV). இது சீப்புருத் தீவை குறிக்கலாம். இந்த பிசின் மரம் நீர் எதிர்ப்பு தன்மையைக் கொண்டது, இம்மரத்தினால் முன் காலத்தில் கிழக்கத்திய நாடுகளில் இருந்தவர்கள் கப்பல்கள், சவப்பெட்டிகள், வீட்டு உபயோகப் பொருட்கள், இசைக் கருவிகள், போன்ற பல பொருட்களைச் செய்தனர்.[34] பேழை போன்றவைகளைச் செய்யும் போது பல காலம் கெட்டுப் போகாமலிருக்கும் மரம்.

இந்த பேழை **அறைகளாக** (קִנִּים, *qinnim*, கின்னிம்) அல்லது “பகுதிகளாகிப்” (NJPSV) பிரிக்கப்பட வேண்டியிருந்தது, பழைய

ஏற்பாட்டின் ஏனையப் பகுதிகளில் இந்தப் பதம் குருவி தன் குஞ்சுகளுக்காக அமைக்கும் "கூடு" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. நோவாவுக்கும் விலங்குகளுக்கும் அறைகள் என புரிந்துகொள்ள வேண்டும். இது எழுத்துப்படியாகவும் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது ஏனெனில் பறவைகளும் பேழைக்குள் வைக்கப்பட்டதினால் "கூடுகள்" என அர்த்தம் கொள்ளலாம். பேழைக்கு **கீல்** (כֹּפֶר, *koper*, கொபெர், அல்லது "பிடுமென்") பூசி நீர் கசியாதப்படிச் செய்ய வேண்டும். எபிரெய வார்த்தைகளான கொப்பேர் மற்றும் கோப்பெர் சொல் விளையாட்டைக் காணலாம்: முதலில் வருவது பேழையைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மரம், பிந்தியது அதில் நீர் கசியாதபடி பூசம் ஒரு வகை பசையைக் குறிக்கிறது.

**வசனம் 15. பேழையைக்** கட்ட கடைப்பிடிக்க வேண்டிய அளவுகளாவன: **முந்நூறு முழம் நீளம், ஐம்பது முழம் அகலம், முப்பது முழம் உயரம்.** முழம்என்பதற்குப் (אַמָּה, *'ammah*, அம்மா) ஹம்மா பழைய உலகில் நிலையான ஒரு அளவுகோல் இருக்கவில்லை, அளவு முழங்கையிலிருந்து நடு விரல் மட்டும். இது ஒவ்வொரு தனிப்பட்டவர்களுக்கும் மாறும், குறிப்பாக இடங்களுக்கும் காலங்களுக்கும் மாறும். பொதுவாக ஒரு முழம் என்பது 18 அங்குலம் ஆகும். அப்படியாயின் பேழை ஏறக்குறைய 450 அடி நீளமும், 75 அடி அகலமும், 45 அடி உயரமுமாய் இருந்திருக்க வேண்டும். தோராயமாக பேழையானது செவ்வக வடிவமானது. சமதளமான அடித்தளமும், இருபக்கமும் சதுரமுமாகும். ஒரு விதமான மிதவையாக வெள்ளத்திற்கு தப்பிக்க வடிவமைக்கப்பட்டிருந்தது. ஜலப்பிரளயத்துக்கு முந்திய உலகிற்கு இந்த அளவு பெரியதாக காணப்பட்டாலும் பண்டைய பாபிலோனிய *கில்கிமெஸ்ன் புராணக்கதையில்* வரும் பேழையைக் காட்டிலும் இது ஐந்து மடங்கு சிறியதாகும்.[35] கப்பல் கட்டுபவர்களின் கூற்றுப்படி நோவாவின் பேழை கடலுக்கு பரிபூரணமான பொருத்தம். சொல்லப்பட்டபடி பாபிலோனியப் பேழையோ (கூம்பு வடிவமானது ஒவ்வொரு பக்கமும் 180 அடி[36]) ஒரு வேளை பெருவெள்ளத்திற்கு தாக்குப்பிடித்திருக்க வாய்ப்பில்லை.

**வசனம் 16.** முதல் பகுதி புரிந்துகொள்ளக் கடின மாயிருந்திருக்கலாம் காரணம் **ஜன்னலுக்குப்** (צֹהַר, *tsohar*, ட்சொகர்) பயன்படுத்தப்பட்ட சொல் எபிரெய வேதாகமத்தில் இங்கு மட்டுமே இப் பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது "ஒளி" என (ASV); "கூரை" (NIV; RSV; NRSV; NEB) "பகலொளிக்காக ஒரு திறப்பு" என (NJPSV) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கடைசி வார்த்தை பொருத்தமாக இருக்கலாம். "ஒளி," "ஜன்னல்" இரண்டையும் சேர்த்து வியாக்கியானம் செய்யலாம். எப்படியிருப்பினும் "ட்சொர்" என்பது "ஜன்னல்" என்று பொருள். என்ற பொதுவான எபிரெய (חַלּוֹן, *challon*, சல்லொன்) பதத்தை ஏன் பயன்படுத்தவில்லை? 8:6ல் தெளிவாகச் சொல்கிறது, நோவா

ஜன்னலைத் திறந்தார், என “ட்சொர்” என்ற பதம் “கூறை” என மொழிபெயர்க்கப்பட்டதில் ஒரு ஆட்சேபனையைக் காணலாம். ஏன் வேதாகம ஆசிரியர் “கூறை” க்குள்ள (גַּג, *gag*, காக்) சாதாரணமான பதத்தை பயன் படுத்தவில்லை ஏன்? மாறாக புரிந்துகொள்ளக் கடினமான பதத்தைப் பயன்படுத்தினார்?

ஒருவேளை “ட்சொர்” என்ற பதம் ஆதியாகமத்தின் ஆசிரியரின் சமகாலத்தவர்களுக்குப் பழக்கப்பட்ட சொல்லாயிருக்கலாம். இப் பதம் ஏனைய பழைய ஏற்பாட்டு நூல்களில் இல்லாதிருப்பதற்கு காரணம் இப்பதம் நாள் போக்கில் காக் என்ற மாற்றுச் சொல் எபிரெய பாஷையில் பொதுச் சொல்லாகியிருக்கலாம். நிச்சயமான விளக்கத்தை இந்த வசனப்பகுதிக்கு வழங்கிட இயலாது. ஆனால், ட்சொர் என்பது “திறப்பாக” சரியாக மொழிபெயர்க்கப்பட்டிருப்பின், பேழையைச் சுற்றியுள்ள ஒரு இடம் கூரையை தாங்கியுள்ள கம்பங்களே இதற்கு இடைஞ்சல் போலிருக்கும். “ட்சொர்” ரை “கூரையாக” எடுத்துக்கொண்டாலும் **பேழையின்** மூடி மழையை உள்ளே விடாமல் **ஒரு அடி** தூக்கி கட்டப்பட்டுள்ளது, “ஒரு அடி” இடைவெளி (வெளிச்சத்திற்கு) கூரைக்கும் பேழையின் சுவரின் **மேல்** பக்கத்திற்கும் இடையே உள்ள இடம்.[37]

**பேழையின் பக்கத்தில்** ஒரு கதவு இருப்பதாக வசனம் சொல்கிறது, ஜலப்பிரளயத்திற்கு முன் பேழைக்குள் செல்ல இது முக்கியம் (7:13-16) மற்றும் பூமி போதிய அளவு வரண்ட பின் அடைக்கலமாயிருந்த ஜீவ ஜந்துகள் யாவும் தங்களுடைய இடங்களிலிருந்து வெளியேறவும் தேவை (8:13-19). எபிரெய வசனம் பேழையில் மூன்று அடுக்கு என சொல்கிறதில்லை, ஆனால் ஆசிரியர் மூன்று அடுக்கைப் பற்றிக் கூறுகின்றார். எழுத்துப் படியான மொழிபெயர்ப்பு **கீழடுக்கு**, **இரண்டாம்** அடுக்கு, **மூன்றாம்** அடுக்கு எனக் கூறுகிறது. இது நோவாவுக்கு இணையான பண்டைய பாபிலோனிய விவரணையிலிருந்து முற்றிலும் வித்தியாசமாக உள்ளது. (உட்நாப்இஸிடிம்) அந்த கப்பலில் ஏழு அடுக்குகளும் ஒவ்வொரு அடுக்கிலும் ஒன்பது அறைகள் வீதம் இருந்தது எனக் கூறுகிறது.[38]

**வசனம் 17.** நேரிடப்போகிற ஜலப்பிரளயத்தை அறிவிக்கிற அறிவிப்பு **இதோ**, என்றப் பதத்துடன் தொடர்கின்றது. கர்த்தர் என்ன செய்யப்போகிறாரோ அதை கவனிக்கச் செய்ய அழைப்பு. **பூமியின் மீது ஜலப்பிரளயத்தை** கொண்டு வர அவர் திட்டமிட்டுள்ளார். ஜலப்பிரளயம் (מַבּוּל, *mabbul*, மாப்புல்) என்ற வார்த்தை நோவாக்காலத்து ஜலப்பிரளயத்துடன் சம்மந்தப் பட்டுள்ளது, ஆதியாகமம் 6-9ல் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் சங்கீதம் 29:10 (“கர்த்தர் ஜலப்பிரவாகத்தின் மேல் ராஜாவாக வீற்றிருக்கிறார்”), இயற்கையின் மீதும், எல்லா சிருஷ்டிகளின் மீதும் தேவன் முழுமையான அதிகாரம் கொண்டவர் என தெரிவிக்கிறது. உலகத்தையும் எல்லா

ஜீவராசிகளையும் படைத்த தேவனுக்கு **ஜீவசுவாசமுள்ள சகல மாம்ச ஜந்துக்களையும் அழிக்கவும்** சர்வ வல்லமையும் உண்டு, ஏனெனில் "பூமியின் மேல் தன் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள்" (6:12). "மாம்சமான யாவும்" (6:12, 13) என முந்தின பகுதியில் வருகிறது, இதற்கு "எல்லா மனுக்குலம்" எனப் பொருள் கொள்ளலாம்; ஆனால் இப்பகுதியில் "ஜீவ சுவாசத்தை உடைய" (רוּחַ חַיִּים, *ruach chayyim*, ருஅச்சய்யிம்) எல்லா மனிதர்களையும், எல்லா மிருகத்தையும் உள்ளடக்கியது (காண்க 7:21; 9:11, 15-17). "பூமியின் மீது" என்பதின் செய்யுள் நடை **வானத்தின் கீழ்**, என்பதாகும் பூமியின் மேல் எல்லாம் சீக்கிரம் அழியும்.

ஜலப்பிரளயம் சிருஷ்டிப்பின் மேல்கீழாக மாறுதலாயிருக்கும், இப்போது தேவன் பூமிக்கும், அதிலுள்ள எல்லாவற்றுக்கும் எதிரியாகச் செயல்படுவார். இதுவே இறுதியான வாக்கல்ல, அவர் அழித்தாலும் புதுத்தொடக்கத்துடன் புதுப்பிக்கவே செய்தார்.

**வசனம் 18.** தேவன் "எல்லா மாம்சத்திற்கும்" என்னச் செய்வேன் எனத் திட்டமிட்டிருப்பினும், நோவாவுடன் **உடன்படிக்கையை ஏற்படுத்துகின்றார்.** "உடன்படிக்கை"க்கு (בְּרִית, *b^erith*, பெரித்) இதுவே பழைய ஏற்பாட்டில் முதல் குறிப்பாகும். அடிப்படை ஆசீர்வாதம் நோவா, இவர் **மனைவி**, அவர்களின் **குமாரர்கள்**, அவர்களின் **மனைவியர்களை** விடுவிப்பது. அவர்கள் எல்லாரும் **பேழைக்குள் செல்லவேண்டும்** அங்கு பூமியின் மீதுவர இருக்கும் நீரின் அழிவுக்கு விலகி காக்கப்பட வேண்டும் (7:7 பார்க்கவும்). இங்கு இக்கூற்று ஒருவேளை ஜலப்பிரளயத்திற்குப்பின் ஏற்பட இருக்கின்ற உடன் படிக்கையயின் பிரதிஷ்டையை எதிர்பார்த்தலாகும் என வியாக்கியானம் செய்யலாம் (9:1-17).

**வசனங்கள் 19, 20.** நோவா மற்றும் அவர் குடும்பத்தின் மூலம் மனிதக்குலத்தையும், விலங்குகளையும் கரிசனையோடுக் காப்பது தேவனுடைய விருப்பம். **சகலவித மாம்சமான ஜீவன்களிலும்** உள்ளவைகள் பாதுகாக்கப்பட வேண்டும்; **வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உன்னுடன் உயிரோடே காக்கப்படுவதற்கு, பேழைக்குள்ளே சேர்த்துக்கொள்** என கர்த்தர் நோவாவுக்கு கட்டளையிட்டார். **பறவைகளிலும் மிருகங்களிலும், ஊரும் பிராணிகளிலும்** இந்த எல்லா சிருஷ்டிகளிலும் காக்கப்படுவதற்காக அவையனைத்தும் **அவனிடத்தில்** பேழைக்குள் வரவேண்டும். நோவா இவைகளை கண்ணிவைத்தோ, அவைகளுக்குப்பின் போயோ பிடிக்க தேவையிருக்கவில்லை, தேவன் ஒருவிதமான உள்ளுணர்வையும் உந்துதலையும் சிருஷ்டிகளுக்கு வழங்கியதால் அவையனைத்தும் அவைகளின் இருப்பிடத்தை விட்டு பாது காப்புக்காக பேழைக்குள் சென்றது. தேவன் ஆதியிலே "மிக நன்றாக இருக்கிறது" என்று சொன்ன மனிதர்களிலும் விலங்கு களிலும் தேவன் பிரதிநிதிகளை சேர்த்துக்கொண்டார் (1:31).

மனித இனத்தின் பொல்லாப்பு மிகவும் பெருகி இருந்த போதிலும். மனிதன் மற்றும் விலங்கினங்களின் இனப் பெருக்கத்திற்கான ஆண்டவருடைய பாதுகாப்பு தொடர்கிறது என்பதனை **ஆண்** மற்றும் **பெண்** என வசனங்கள் (1:22, 27, 28) குறிப்பிடுகின்றது. பெருவெள்ளத்திற்கு பின்னர் எதிர்கால உலகத்தின் நம்பிக்கையாக கருதப்பட்ட "மாம்சமான யாவும்" ஆண்டவரின் புதிய படைப்பின் எதிர்பார்ப்போடு ஓர் ஆண்டிற்கும் மேலாக நோவாவின் பேழையில் பயணப்பட வேண்டியதாக இருந்தது. இதில் நீர் வாழ் உயிரினங்களின் பாதுகாப்பிற்கு பேழை அவசியமற்றது என்பது நிச்சயம்.

**வசனம் 21. உணவிற்காக உணவு** வகைகளை சேகரிக்கும்படி ஆண்டவரிடமிருந்து நோவா கட்டளையைப் பெற்றார். இவ்வுணவு அவருடைய இல்லத்தினரையும், இதர உயிரினங்களையும் பெரு வெள்ளத்தின் போது பாதுகாத்துத் தக்க வைத்துக் கொள்ளும். ஒரு வேளை நோவா மற்றும் அவர் தம் இல்லத்தினரும் மற்றும் இதர புலாலுண்ணும் உயிரினங்களும் பேழையில் இருந்தப்போது புலால் உணவை உண்டனரா என்பது அறியப்படவில்லை. பூமியின் மீதெங்கும் வித்தை உயிரோடே காக்கும்பொருட்டு, நீ சுத்தமான சகல மிருகங்களிலும், ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும் சுத்தமில்லாத மிருகங்களில் ஆணும் பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடும் (7:2) என கூறப்பட்டுள்ளதனை வைத்து, வெள்ள நீர் தணியும் வரை நோவா மற்றும் அவருடைய இல்லத்தினர் மற்றும் இதர புலால் உண்ணும் விலங்கினங்கள் ஆகியவை இந்த சுத்தமான விலங்கினங்களை உணவாக கொள்வதற்கான காரணமாக இருக்குமென ஒரு சிலர் நினைப்பதுண்டு. ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோர் பாவம் செய்த பின்னர், ஆண்டவர் அவர்களை தோல் உடையினால் உடுத்தினார் (3:21) என்பதனை வைத்து, முதல் இணையினர் அடிக்கப்பட்ட அந்த விலங்கினத்தின் இறைச்சியை தரையின் மேல் அழுகிப்போக விடாமல் தின்று இருக்கக்கூடும் என யூகிக்கப்படுகிறது. தனது பெற்றார்கள் தோட்டத்தை விட்டு விரட்டப்பட்ட சில காலத்திற்கு பின்னர் (4:2-4) ஆபேல் தமது மந்தையின் தலையீற்றை காணிக்கையளிப்பதனால், பலியிடப்பட்ட விலங்கினத்தின் ஒரு பகுதியினை மனிதர் தின்றிருக்கக்கூடும். இவ்வழக்கம் பாவ நிவாரண பலியினை தவிர்த்து மோசேயின் சட்டப்படி பின்னர் கைக்கொள்ளப்பட்டது (வழிபடுபவருக்கு ஒரு பகுதி கொடுக்கப்படாமல் ஆசாரியருக்கு கொடுக்கப்பட்டது) பாவ நிவாரண பலி முழுமையாக பலிபீடத்தின் மேல் எரிக்கப்பட்டு ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்த கூற்றுகள் அனைத்தும் உண்மையாக இருக்கக்கூடும் என்ற போதிலும், வசனங்கள் கூறுவதனை தவிர வேறு திட்டவட்டமான அறிவு நமக்கு கிடைக்கப்பெறாததால், இவைகள் வெறும் யூகங்களாகவே காணப்படுகின்றது. வெள்ளப்பெருக்கின்

காலத்திற்கு முன்னர் வரை மக்கள் தங்கள் உணவோடு இறைச்சியையும் சேர்த்துக் கொள்ள ஆண்டவரிடமிருந்து எவ்விதமான கட்டளையையும் பெற்றிருக்க வில்லை (9:2, 3).

**வசனம் 22.** மீண்டும் மீண்டும் இதன் ஆக்கியோன் நோவாவின் கீழ்ப்படிதலுக்கு அழுத்தம் தருகிறார். **நோவா தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியெல்லாம் செய்தான்** (காண்க 7:5). எபிரெய மடலின் ஆக்கியோனும் நோவா ஆண்டவருக்கு முழு மனதோடு அர்ப்பணித்தவை "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தி யுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக் குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்" (எபி. 11:7) என வலியுறுத்துகிறார். விவிலிய பதிவுகள் ஆண்டவர் நோவாவிற்கு கட்டளையிட்டதனை மட்டுமே வெளிப்படுத்துகிறதேயொழிய மரங்களை வெட்டி அதனை கட்டப்படும் இடத்திற்கு கொண்டு வரவும், அதனை பலகைகளாக வெட்டவும், அதனை ஒன்றிணைத்து பேழையாக செய்ய அவர் செலவிட்ட மிகப்பெரிய அளவிலான நேரம், முயற்சி மற்றும் பொருட்செலவுகளைப் பற்றி அதன் பதிவுகளில் ஒன்றும் கூறப்படவில்லை. நோவாவும் அவர்தம் இல்லத்தினரும் எவ்வளவு பொருட்கள் செலவழித்தனர், எவ்வளவு மனித பலத்தையும் வரவழைத்தனர் என்பதனை குறித்து இத்தொகுப்பில் பேரமைதி நிலவுகிறது. பேழையில் உள்ள வெடிப்புகளை சரி செய்ய பெரும் அளவு சாந்துகளை (தார்) எப்படிப் பெற்றனர்? ஒரு ஆண்டிற்கு பேழையில் வாழ மனிதருக்கும் விலங்கினங்களுக்கும் தேவையான பெரும் அளவு உணவை எப்படி சேகரித்தனர்?[39]

இவர்களுடைய பணி மலைக்க வைக்கக்கூடியது, அதனை செய்து முடிக்க நோவாவிற்கும் அவருடைய இல்லத்தினருக்கும் பல ஆண்டுகள் கடந்திருக்கக்கூடும். பேழையினை செய்து முடிக்கும் பணிச்சுமை மற்றும் அதன் தேவைகளின் கடினங்களுக்கிடையே, நோவா அவரை சுற்றியுள்ள மக்களை குறித்ததான இதயத்தினைப் பெற்றிருந்தார். "நீதியின் பிரசங்கி" என இவரைக்குறித்து பேதுரு குறிப்பிடுகிறார் (2 பேதுரு 2:5). பணியினை தொடர்ந்து கொண்டே பூமியின் மீது வரப்போகிற பெருவெள்ளத்தின் பேராபத்தில் சிக்கி அழிந்து போகாதபடி வருவோர் போவோரிடம் அவர்களின் பொல்லாப்பை விட்டு ஆண்டவரிடம் மனந்திரும்பும்படி நோவா வேண்டிக்கேட்டுக் கொண்டார் என்பது திண்ணம். நோவா கூறுவதனைப் போன்றதொரு பெருவெள்ளத்தை மக்கள் இதுவரை கண்டது இல்லை எனவே "ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்" (மத். 24:39) மக்கள் அவரைப் பார்த்து பரிகாசம்

செய்து எள்ளி நகைத்தனர். எப்படியாயினும் நோவா மிகவும் உண்மையுள்ளவராக இருந்து, அவரது விசுவாசம் காணாத அந்த பேரழிவு நிச்சயம் வரும் என செயல்பட வைத்து அதனை உண்மையாக்கியது. பெரு வெள்ளத்திற்கு முந்தைய மூதாதையான இவர், “தனக்கு ஆண்டவர் கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்தார்.” என எதிர் வரக்கூடிய பெருவெள்ளத்திற்கு செய்த ஆயத்தங்களை ஆதியாகமத்தின் ஆக்கியோன் கச்சிதமாக தொகுத்தளிக்கிறார்.

## நடைமுறைப்படுத்துதல்

### பாவத்தின் பயங்கரத்தன்மை (அதிகாரம் 6)

உலகம் உண்மையில் அழிவிற்கு பாத்திரமானதாக இருந்ததா, அல்லது ஆண்டவர் பெருவெள்ளத்தினை அனுப்ப முடிவு செய்தப் போது எளிதில் சினம் கொள்ளுகிறவாராக இருந்தாரா? ஆண்டவர் பல வழிகளில் சித்தரிக்கப்பட்டிருக்கிறார் அதில் “கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன்” (நாகூம் 1:2); என்பதும் அடக்கம் ஆனால் எதிர்பாரா மாற்றங்கள் அடையும் மனப்பாங்கு கொண்டவர் அல்ல. அவர் உணர்வுகளுக்கும் மன ஒட்டங்களுக்கும் ஒரு போதும் இட மளிக்கிறவர் அல்ல. அவரிடம் “யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை” (யாக். 1:17). வேதமெங்கிலும் தெய்வீக பழிவாங்குதலும் சினமும், பாவம், குற்றம், கீழ்ப்படியாமை மற்றும் முரட்டாட்டத்துடன் எப்போதுமே இணைந்துக் காணப் படுகின்றது.[40] ஆண்டவர் தம்முடைய முழுமையான நீதியின்படி பாவத்தினை தண்டிக்காமல் விட்டுவிட முடியாது.

*உலகத்தின் பாவம்.*

1. மண உறவு சீர்கேடடைந்திருந்த பூமியின் மீது வெள்ளம் வந்தது, ஒரு ஆண், ஒரு பெண் என கணவன் மனைவியாக தாம் இணைத்ததே மண வாழ்வினை குறித்ததான ஆண்டவருடைய உண்மையான திட்டமாக இருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையாகவும், தோழமையாகவும் மற்றும் வாழ்க்கை துணையாகவும் இணைந்து, பிள்ளைகளுக்கு அன்பையும் பாது காப்பையும் அளிக்கிற இல்லத்தினை அமைக்க வேண்டும். அதில் பிள்ளைகள் பெற்றோர்களை கனப்படுத்துகிறவர்களாகவும், ஆண்டவரை மகிமைப்படுத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும் (1:27, 28; 2:18-25). காயீன் தனது உடன்பிறப்பாகிய ஆபேலை கொன்றதினால் இல்லத்தின் ஒருமைப்பாடு கரைந்துப் போனது (4:1-8) மற்றும் காயீன் வழி வந்த லாமேக்கு பலதாரங்களை கொண்டப்பின்னர் வழிமரபும் சிதைந்துப் போனது (4:19).

மண உறவின் சீர்கேடு, “தேவ புத்திரர்கள் [ஒருவேளை சேத்தின் வழிமரபாக இருக்கக்கூடும்] மனுஷ குமாரத்திகளை [ஒருவேளை காயீன் வழிமரபாக இருக்கக்கூடும்] அதிக அழகுள்ளவர்களாக கண்டு தங்களுக்குள்ளே பெண் கொண்டபோது” ஜலப் பிரளயத்திற்கு முன்புவரை தொடர்ந்தது (6:2). இப்படி குறிப்பிடுவது சேத்தின் வழிமரபினர் அனைவரும் ஆண்டவரை பின்பற்றுகிறவர்கள், என்றும் காயீனுடைய வழிமரபினர் அனைவரும் ஆண்டவரை பின்பற்றாதவர்கள் என குறிப்பிடுவது இல்லை. சேத்தின் வழிமரபினர் பல மனைவிகளை கொள்வதனை பொதுவான நடைமுறையாக கொண்டனர். அவர்கள் தங்கள் மனைவிகளை தெரிவு செய்து கொள்ள பண்புகளையும், ஆவிக்குரிய தகுதிகளையும் பார்க்காமல், வெறும் உடல் வழியான ஈர்ப்புகளை தகுதியாக வைத்துக் கொண்டனர். இதில் ஐயத்திற்கு இடமில்லாமல் சமுதாயத்தில் உச்சக்கட்டமான போட்டிகளும், தவறுகளும், கலகங்களும் உண்டாயின.

2. பலதார உறவுகளின் மூலம் பிறந்த பிள்ளைகள், தீவிரவாதத்தையும், எல்லாவிதமான பொல்லாப்புகளையும் செய்தபடியினால் பெருவெள்ளமானது பூமியின் மீது வந்தது. அழகான பெண்களை மனைவியராக கொள்ளும் போட்டியெனும் சூழலில், இவர்களது புதல்வர்கள் தங்களுக்கு பெண் கொள்வதற்கும், தங்கள் வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலேயும்; எல்லையற்ற தீவிரவாதத்தை கடைப்பிடித்தனர். மனித வழிமரபு எவ்வளவு சிதைவுண்டது என்பதனை வசனப் பதிவுகள் மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், “அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே” என்றும், கர்த்தர் கண்டு (6:5) என குறிப்பிடுவதன் மூலம் உறுதிப்படுத்துகின்றது. மேலும் வசனமானது பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; “பூமி கொடுமை யினால் நிறைந்திருந்தது” என கூறுகின்றது (6:11).

6:4ல் இராட்சதர்கள் கடைபிடித்த பாவம் இன்னதென்று குறிப்பிடப்படாவிட்டாலும், படைப்பின் காலந்தொட்டு மனித இதயங்களில் எழுதப்பட்ட ஒழுக்கநெறியின் சட்டங்கள் ஒவ்வொன்றையும் (ரோமர் 2:14, 15) பிற்காலத்தில் பத்து கட்டளைகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறவைகளையும் (யாத்தி ராகமம் 20:3-17). அவர்கள் தகர்த்து எரிந்தனர் என்பதனை இவ்வசனம் குறிப்பிடுகிறது. மக்கள் விலங்கினங்களைப் போல வாழ்ந்தது மட்டுமில்லாமல், விலங்கினங்களும் நடந்து கொள்ளாத விதமாக நடந்து சமூகத்தில் அழிவை கட்டவிழ்த்தனர். இதன் காரணமாகவே அவர்கள் “பலவான்கள்” எனவும் “புகழ் பெற்ற மனிதர்கள்” (எழுத்துப்பூர்வமாக “பேர்பெற்ற மனிதர்”; 6:4) எனவும் அறியப்பட்டனர். அவர்கள் தங்களையும் தங்களை சார்ந்தவர்களையும் “கெடுத்து” (அல்லது அழித்து) (6:11, 12). தீமைக்கும் தீவிரவாதத்திற்கும் பேர் பெற்று.

அவர்களுடைய சமூகத்தில் பலம் பொருந்தியவர்களானார்கள். வாழ்நாள் முழுமைக்கும் ஆசீர்வதிக்க வேண்டுமெனும் ஆண்டவருடைய அசலான திட்டத்தை அவர்கள் முறியடித்தனர் (1:24-31). உலகத்திற்கு ஆசீர்வாதமாக இருப்பதனை விட்டு விட்டு அவர்கள் உலகின் மீது அனைத்து விதமான தீமையினை செழிப்புறச் செய்தனர்.

*ஆண்டவருடைய தண்டனையும் கிருபையும்.*

1. ஆண்டவருடைய தண்டனையின் முன் நின்ற உலகின் மீது பெருவெள்ளம் வந்தது. ஒரு அன்பான பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் அழிவு நிறை நடத்தையினை காண்கையில் அவர்களின் இதயம் எப்படியிருக்குமோ அதனை போன்றே உலகின் எல்லா இடத்திலும் ஆண்டவர் கண்ட பொல்லாப்பு அவருக்கு மிகுந்த வருத்தத்தை உண்டு பண்ணினது. ஒரு பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு காட்டும் அன்பை விட மனித இனத்தின் மீது ஆண்டவர் காட்டும் அன்பு மிகப்பெரியது ஆகையால் அவரது இதயத்தின் வலியும் வருத்தமும் எவ்வளவு பெரியதாக இருக்கும்! ஒரு தனி மனிதன் தனது சிந்தையில் பொல்லாத சிந்னையினைக் கொண்டு, நினைத்துப் பார்க்கும் அனைத்து கொடிய குற்றங்களை செய்கையில், ஆண்டவருடைய இதயம் வலி நிறைந்ததாக இருக்கிறது (6:5-7; ஓசியா 11:1-8). இதன் காரணமாகவே ஆண்டவர் நோவா காலத்தில் உலகின் மேல் பெருவெள்ளத்தினால் தண்டனைத்தீர்ப்பை கட்டளையிட்டார் (6:13, 17).

ஒரு பாவியை தண்டிக்கும் ஆண்டவருடைய சினத்தை புரிந்துகொள்ள, அவருடைய பழிவாங்குதலையும் அவருடைய அன்பையும் அவரது தூய்மையின் பின்னணியில் பார்க்க வேண்டும். ஆண்டவர் பாவத்தை ஏதோ முக்கியமற்றதாக எண்ணி கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது, மனிதரை தண்டனையிலிருந்து தப்பிக்க விடவும் முடியாது. கீழ்த்தரமான செயல்களை தொடர்ந்து செய்யும் தீமை நிறை மனிதரை தண்டிக்க கண்டிப்பாக அவர் செயல்படவேண்டியதாக இருக்கிறது. சில சமயங்களில் சினமும் அன்பும் ஒன்றுக்கொன்று எதிரானதாக கூறப்படுவதுண்டு. சிலர் “அன்பென்பது ஆண்டவரின் முதன்மை பண்பாக இருக்கும் பட்சத்தில், பாவியின் மீது சினத்தை ஊற்றுகிற ஆண்டவராக அவர் எப்படியிருக்கக்கூடும்?” என வினவுவதுண்டு. சினம் அன்பிற்கு எதிரானதல்ல, அக்கறையின்மையே அன்பிற்கு எதிரானதாகும்.

ஒரு கணவன் தனக்கு உண்மையற்ற ஒரு மனைவியை உடையவனாக இருந்து எந்த வேறுபாட்டையும் காண்பிக்காமல் இருந்தாரானால், அவர் அவருடைய மனைவியிடம் அன்பு கூரவில்லையென இயல்பாகவே அவருடைய நண்பர்கள் முடிவு செய்யக்கூடும். அவர்கள் அப்படி எண்ணுவதில் சரியானவர்களாக இருக்கக்கூடும்! அவர் உண்மையில் அவருடைய மனைவியை

அன்புகூருகிறவராக இருந்தால், அவர் மீது நீதியான சினம் கொண்டிருக்கக்கூடும், ஏனெனில் ஆண்டவர் படைக்கும் போது மணவாழ்வானது ஒரு ஆணிற்கும் ஒரு பெண்ணிற்கும் இடையேயுள்ள உள்ளார்ந்த உறவாக படைத்தார். எனவே அந்த உறவிற்கு எதிராக வருகிறவர்களை சகித்துக் கொண்டிருக்க இயலாது.

மனிதரோடு ஆண்டவர் கொண்டுள்ள உறவு மணவாழ்விற்கு ஒப்பாக கூறப்பட்டுள்ளது; தமது மக்களுள் இருக்கிற தமது சாயலையும் படைத்தவரின் பண்பாகிய தூய்மையை கெடுக்கும் எவ்விதமான உண்மையற்ற செயலையும் அவர் சகித்துக் கொண்டிருக்க இயலாது. மணவாழ்வினைப் போன்றே, ஆண்டவர் மனிதரோடு ஒரு சிறப்பான தனிப்பட்ட உறவை எதிர்ப்பார்க்கிறார். பல காதலர்களை (தேவர்களை) அவர் அனுமதிப்பதில்லை. தம் மீது கொண்டுள்ள விசுவாசத்தினை பிற தேவர்கள் மீது மனிதர் செலுத்துகையில் (உண்மையாகவோ இல்லது கற்பனையாகவோ) அவர் தெய்வீக சினம் கொள்கிறார் (யாத். 20:5).

நமது அன்பு நிறைந்த ஆண்டவர் நம்மை உருவாக்கினார், அனைவருக்கும் வாழ்வை தருகிறார், அனைத்து விதமான ஆசீர்களினாலும் ஆசீர்வதிக்கிறார் (யாக். 1:17). அவரைப் பற்றி அறியாத ஒவ்வொரு மனிதரோடும் அவர் தனிப்பட்ட உறவை வைத்துக்கொள்ள விரும்புகிறார். புற இனத்தவர்களாகிய அத்தேனியர்களுக்கு பவுல் கூறுகையில், “அறியப்படாத தேவன்” எனவும் அவர் வெகு தொலைவில் உள்ளவர் என்றும் கூறாமல்; படைத்தவரைப் பற்றி அரிஸ்டாட்டிலின் கூறுவதனைப் போன்று[41] கூறாமல் அவரது கருத்திற்கு எதிராக, உண்மையான ஆண்டவர் “நம்மை விட்டு வெகு தொலைவில் இல்லாமல்” மிக அருகில் இருக்கிறாரென கூறுகிறார் (அப். 17:27). ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் (அப். 17:28) என பவுல் உறுதிப்படுத்துகிறார். நாம் ஆண்டவரால் படைக்கப்பட்டிருக்கின்ற படியால் நமது வாழ்க்கையை எப்படி வாழ்கிறோம் என்பதற்கு பொறுப்பாளிகளாக இருக்கின்றோம்.

தன் முனைப்புடைய மனிதர் இதனை கேட்க விருப்பங் கொள்ளமாட்டார்கள், மேலும் சிலருக்கு அது நியாயமற்றதாக ஒலிக்கும். எப்படியாயினும் நாம் அவரது சாயலின்படி படைக்கப்பட்ட ஒழுக்கமுள்ள பிள்ளைகளாக இருக்கிறோம், ஆண்டவருடைய சட்டங்கள் நமது இதயத்தில் எழுதப்பட்டிருக்கிறது (ரோமர் 2:14, 15). நாம் அருவருக்கத்தக்க பாவத்தை செய்கையில், “சாக்குபோக்குச் சொல்ல” இடமற்று இருக்கிறோம் (ரோமர் 1:20). மேலும் மரணத்திற்கு ஏதுவானவர்களாக இருக்கிறோம் (ரோமர் 1:32). “இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய்

நியாயந்தீர்ப்பார்” என ஆண்டவருக்கு தேவையானவற்றை கூறும்படி உந்தப்பட்டார் (அப். 17:30, 31). “உலகளாவிய பெருவெள்ளத்தின் வழியாக பொல்லாத மனிதர்களின் மேல் தண்டனைத் தீர்ப்பு வரப்போகிறது, எனவே மீந்துள்ள நீதிமான்கள் காப்பாற்றப்பட்டு பிழைப்புற ஒரு பேழையினை கண்டிப்பாக உருவாக்க வேண்டும்” என இது போன்றதொரு செய்தியினையே ஆண்டவர் நோவாவிற்கும் அளித்தார் (காண்க 6:13-21).

2. ஆண்டவருடைய கிருபையும் தண்டனைத்தீர்ப்பும் அளிக்கப்பட்ட உலகின் மீது பெருவெள்ளம் வந்தது பாவமும் அழிவும் நிறைந்த உலகில் நடுவில், நோவா “நீதிமானும்” “உத்தமனுமாக” இருந்தாரென்றும், கர்த்தருடைய கண்களில் அவருக்கு கிருபை கிடைத்தது எனவும் ஆதியாகமத்தின் தொகுப்பு கூறுகிறது (6:8, 9). இவ்வகையான கிருபை என்பது (חֵן, *chen*, சென்) தகுதியற்றவர்களுக்கு கொடுக்கப்படுவதாகும். தன்னால் சம்பாதித்துக் கொள்ள முடியாததும், அதனைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியானவர்களாகவும் இல்லாதவர்களுக்கு அளிக்கப்படுதலே கிருபையாகும். பாவிகள் நிறைந்த சிதைந்த உலகில் நோவாவைக் கண்டு ஆண்டவர் அவர் மீது தமது அன்பை வைத்தார். இந்த பூமியின் மீதுள்ள வழிமரபினரை அழிக்கும் முடிவினை அவர் நோவாவிற்கு வெளிப்படுத்தினார், மேலும் நோவாவிற்கும் அவர்தம் இல்லத்தினருக்கும், பேழையினுள் கொண்டுவரப்போகும் விலங்கினங்களுக்கும் விதிவிலக்காக அவர்களுக்கு ஒரு திட்டத்தை ஆண்டவர் வைத்திருந்தார்.

பேழையை உருவாக்கும் பணியோடு எதிர்வரும் பெருவெள்ளத்தினால் வரும் அழிவினை தவிர்க்க பக்தியற்ற உலகை மனந்திரும்புதலுக்கு நேராக அழைக்க “நீதியின் பிரசங்கியாகவும்” அவர் நியமிக்கப்பட்டார் (2 பேதுரு 2:5). இது ஆண்டவரின் பொறுமையையும், இரக்கத்தையும் சித்தரிக்கிறது. ஒருவரும் அழிந்து போகாதபடி அனைவரும் மனந்திரும்ப வேண்டும் என்பதனையே அவர் விரும்புகிறார் (2 பேதுரு 3:9). நோவா எத்தனை ஆண்டுகள் பிரசங்கித்தார் என்பதும் பேழையினை கட்டி முடிக்க எத்தனை ஆண்டுகள் சென்றது என்பதனை குறித்தும் வேதத்தில் தெளிவாக கூறப்படவில்லையெனினும் “பேழையினை கட்டி முடிக்கும் வரை ஆண்டவர் பொறுமையாக காத்திருந்தார் எனவும், அதில் சிலராகிய எட்டுப்பேர் மட்டும் பாதுகாக்கப் பட்டனரென்றும் ஏவப்பட்ட வேத வாக்கியங்கள் கூறுகிறது” (1 பேதுரு 3:20).

எத்தனைப் பேர் நோவாவின் பிரசங்கத்திற்கு செவிமடுத்தனர் என்பதனை குறித்து வேத வசனங்கள் எதனையும் குறிப்பிடவில்லை, எனினும் அவர்களின் வாழ்வு முறையில் எவ்விதமான மாற்றமும் நிகழவில்லை என்பதனை இயேசுவின் சொற்களை கொண்டு சுருங்க நினைக்க இயலும். அவர்கள் நோவாவை பரிகசித்து தங்கள்

பொல்லாப்பிலும் அலட்சிய வழியிலும் தொடர்ந்தனர் என்பது திண்ணம். “எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண் கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனை வரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள்” (மத். 24:38, 39).

ஆண்டவர் தமது வசனத்தை கொடுத்து நற்செய்தியின் பிரசங்கியார்களை அனுப்பி, பாவத்தை விட்டு நீதிக்கு திரும்பும் வழியினை அதாவது மனந்திரும்பும் வழியினை ஏற்படுத்தினார் (அப். 26:20; ரோமர் 10:8-14). கிறிஸ்துவை தேவ மைந்தனாக விசுவாசித்து அறிக்கை செய்கிறவர்கள் பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள முடியும் (அப். 2:38; 8:37, 38). பெருவெள்ளதிற்கு பிறகு உலகம் சுத்திகரிக்கப்பட்ட பின்னர் உலகம் ஒரு புதிய தொடக்கத்தினைப் பெற்றது, ஆண்டவர் தம்மிடம் திரும்புகிற அனைவருக்கும் “புது வாழ்வில் நடக்கும்” வாய்ப்பினை அளிக்கிறார் (ரோமர் 6:4).

## ஆண்டவருடைய இரட்சிப்பு (அதிகாரம் 6)

*மீட்பளிப்பதில் எப்போதுமே ஆண்டவர் முந்தி முயற்சி எடுக்கிறார்.* மனிதர் தங்களது நற்பண்பாலும், செயல்களாலும் ஆண்டவரை அடையும் முயற்சியினை மேற்கொள்ள தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். மட்டுமல்லாமல் தம்மை அன்புகூரவும், மீட்படையவும் அவர் மனிதனை வலுகட்டாயம் பண்ண இயலாது. ஆண்டவர் “இழந்து போனதைத் தேடுவதற்கும் மீட்பதற்கும்” முதலாவதாக முயற்சி எடுக்கிறார் (லூக். 19:10), யோவான் கூறுகையில் “அவர் முதலாவது அன்புகூர்ந்தபடியால் நாம் அவரில் அன்பு கூருகிறோம்” என கூறுகிறார் (1 யோவான் 4:19). இதனைப் போன்றே நோவாவிற்கும் அவர் காலத்து மக்களுக்கும் நடந்தது. ஆண்டவர் தமது அன்பினால் முயற்சி மேற்கொண்டு, முழு இதயத்தோடு கீழ்ப்படியும் நீதிமானாகிய நோவாவை கண்டெடுத்து, அவர் மூலமும் அவரது இல்லத்தினரின் மூலமும் உலகத்திற்கு ஒரு புதிய தொடக்கத்தை உண்டு பண்ண தீர்மானித்தார். மேலும் நோவா காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு எதிர்வரும் அழிவை குறித்து எச்சரிக்க நோவாவை பயன்படுத்தி, முயற்சியினை மேற்கொண்டு, மனந்திரும்பி அழிவிலிருந்து தப்பிக்கும் வாய்ப்பினை அளித்தார்.

*மனித இனம் மீட்படைவதற்கும் அல்லது தண்டனை தீர்ப்படைவதற்கும் ஆண்டவருடைய “முன் குறிப்பு” தன்னிச்சையாக தீர்மானிப்பது கிடையாது.* பொல்லாதவர்களின் மேல் வெள்ளப்பெருக்கை அனுப்ப ஆண்டவர் தீர்மானித்த போதும், மீட்படைவது அல்லது அழிவுறுவது என்பதனை குறித்த தெரிவை அவர்

ஒவ்வொரு தனி மனிதனிடமும் விட்டுவிட்டார். ஆண்டவருக்கு கீழ்ப்படியவும் அல்லது கீழ்ப்படியாமல் இருக்கவும் ஒவ்வொருவரும் சுய சித்தம் பெற்றிருந்தனர். ஆவிக்குரிய பகுதிகளில் மீட்படையவும், தண்டனையடையவும் எந்த ஒரு மனிதனுடைய நிலைமையை நிபந்தனை இல்லாமல் ஆண்டவர் முன்குறிப்பது கிடையாது. தம்மிடம் "வர" அனைவரும் அழைக்கப் பட்டனர் (காண்க மத். 11:28-30; யோவான் 6:44, 45; வெளி. 22:17). ஒரு சிறந்த நல்லொழுக்கம் நிறைந்த மனிதரொருவர் ஆண்டவருடைய அழைப்பினை புறக்கணித்து மீட்படையாமல் இழந்து போக இயலும், அதேபோன்று மிகப் பெரிய பாவியாகிய ஒருவர் சத்தியத்தைக் கற்று, விசுவாசத்திற்கு செவிமடுத்து மீட்படைய இயலும் (லூக். 23:39-43; அப். 22:1-16; 1 தீமோ. 1:12-16).

*தெய்வீக மீட்பானது, மனித முயற்சியினை அடிப்படையாக கொண்டதாக இராமல் கிருபையை அடிப்படையாக கொண்டதாக இருக்கிறது.* பழைய ஏற்பாட்டிலும், பதிய ஏற்பாட்டிலும் மீட்பானது எப்போதும் கிருபையினாலும் விசுவாசத்தினாலுமே வருகிறதே யொழிய செயல்களின் தகுதிகளினால் வருவது கிடையாது (எஸ்றா 9:8; எரே. 31:2; ரோமர் 4:1-8; எபே. 2:8, 9). ஒரு சிறந்த மனிதரின் நீதி ஆண்டவரோடு ஒப்பிடுகையில் "அழுக்கான கந்தையாக" இருக்கிறது என (ஏசாயா 64:6) கூறப்பட்டுள்ளது. எனவே ஒரு மனிதன் தான் மீட்படைவதற்கு ஆண்டவருடைய கட்டளைக்கு செவிமடுக்கும் விசுவாசத்தினை பெற்றிருக்க வேண்டும். இதனைத்தான் நோவா செய்தார், இவரைக் குறித்து எபிரெய மடலின் ஆக்கியோன் இவ்வாறாக குறிப்பிடுகிறார் "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுப்பண்ணினான், அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானது என்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்கு சுதந்திரவாளியானான்" (எபி. 11:7).

---

இறுதிக் குறிப்புகள்

[1]1 Enoch 6–11. A translation of this text is found in James H. Charlesworth, ed., *The Old Testament Pseudepigrapha* (New York: Doubleday, 1983), 1:15-19. [2]எடுத்துக் காட்டாக இச்சொல் எபிரெய மொழியில் "தேவ புத்திரர்" எனும் எழுத்துப் பூர்வமான பொருளை அளிக்கிறது. NJPSV மொழிபெயர்ப்பு "தெய்வீக பிறவிகள்" (தூதர்கள்) என இச்சொற்களை பொருள்படுத்தி இருக்கிறது. இந்த மொழிபெயர்ப்பின் விமர்சனமாக, ஜோன் டி. லேவென்சன் "இந்த சுருக்கமான விவரிப்பு தற்போது வழக்கத்தில் இல்லாத நன்கறிந்த கட்டுக் கதையினை ஒடுக்குவதனைப் போன்று காணப்படுகின்றது என கூறுகிறார். இது ஆண்டவருக்கும் மனிதனுக்குமான முக்கியமான எல்லைகளை உடைத்ததாக பதிவு செய்கிறது (வசனம் 1-2)" (Jon D. Levenson, "Genesis," in *The Jewish Study Bible*, ed. Adele Berlin and Marc Zvi Brettler [New York: Oxford University Press, 2004], 21). [3]பாவம் செய்தவர்கள் தெய்வீக பிறவிகளெனக் குறிப்பிடுவதற்கு 2 பேதுரு 2:4, 5 மற்றும் யூதா 6 ஆகிய வசனங்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது, ஆனால் இப்பகுதிகள் ஆதியாகமம்

6:2 கூறப்பட்டுள்ள பாவத்துடன் தொடர்புடையவையல்ல. அவ்வசனங்கள் பாவம் செய்து கீழே தள்ளப்பட்டு “இருளின் குழியில் நியாயத்தீர்ப்பிற்காக” வைக்கப்பட்டிருக்கிற தேவ தூதர்களை குறிப்பிடுகின்றது. மேலும் அவைகள் ஆதியாகமம் 3ல் கூறப்பட்டுள்ள மனிதனின் வீழ்ச்சிக்கு முன்னர் சாத்தானும் அவனுடைய தூதர்களும் செய்த பாவத்தை குறிக்கிறது. [4]காண்க “Targum of Onkelos,” in *The Targums*, trans. J. W. Etheridge (New York: KTAV Publishing House, 1968), 46. [5]தாவீதின் வழி வந்த அரசர்களை தேவ குமாரர்கள் என கூறுவதுண்டு (2 சாமு. 7:14; சங். 2:6, 7, 12). [6]அதிகாரத்திலுள்ள மனிதர்கள் எனும் நிலையில் அவர்கள் அநியாயத்தீர்ப்பு செய்து “துன்மார்க்கருக்கு முகதாட்சணியம்” செய்கிறவர்களாக குற்றஞ்சாட்டப்பட்டனர் (சங். 82:2) ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து, சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்களென அறிவுறுத்தப்பட்டனர் (சங். 82:3) மேலும் அவர்கள் இந்த ஆலோசனைக்கு செவிமடுக்க தவறினால் “மனிதர்களைப் போல சாவீர்கள்” என எச்சரிக்கப்பட்டனர் (சங். 82:7). [7]John T. Willis, *Genesis*, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 164. [8]6:3ல் கூறப்பட்டுள்ள “ஆவிகள்” எனும் பதம் பல மொழிபெயர்ப்புகளில் ஆங்கிலத்தில் பெரும் எழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கிறது (ASV; NIV; NKJV; NCV; NLT; ESV). [9]இந்த மொழிபெயர்ப்பில் பின் வரும் மொழிபெயர்ப்புகளும் இணைக்கப்பட்டுள்ளது: KJV; RSV; NRSV; CEV; NAB; JB; NJB; NEB; REB. [10]Francis Brown, S. R. Driver, and Charles A. Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament* (Oxford: Clarendon Press, 1962), 192.

[11]இங்கு *baśar* எனும் எபிரெயப் பதம் புதிய ஏற்பாட்டில் σάρξ (*sarx*) எனும் பதம் போலவே உள்ளது. [12]Brown, Driver, and Briggs, 142. [13]NIV யின் சில அச்சுகளில் “அழிவு” என்பதற்கு *baśar* எனும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது “சாவுக்கேதுவான” எனும் பதத்தை விட சிறந்த பயன்பாடாகும். [14]“Targum of Onkelos,” in *The Targums*, 46. [15]Gordon J. Wenham, *Genesis 1—15*, Word Biblical Commentary, vol. 1 (Waco, Tex.: Word Books, 1987), 142. [16]Victor P. Hamilton, *The Book of Genesis: Chapters 1—17*, The New International Commentary on the Old Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1990), 269–70. [17]Timothy R. Ashley, *The Book of Numbers*, The New International Commentary on the Old Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1993) 243. [18]Gerald L. Mattingly, “Anak,” in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 1:222. [19]இரும்பு படுக்கைக்கு பதிலாக சில மொழிபெயர்ப்புகளில் இதன் பொருள் கருங்கல் சவப்பெட்டி என கூறப்பட்டுள்ளது (NEB; REB; காண்க TEV). [20]இந்த மொழிபெயர்ப்புகள் இராட்சதர்களை தேவதூதர்கள் (“தேவ புத்திரர்கள்”) மற்றும் பெண்களின் (“ஆண்களின் மகள்கள்”) வழிதோன்றல் என கூறப்பட்டுள்ளது.

[21]H. J. Stoebe, “נחם,” in *Theological Lexicon of the Old Testament*, trans. Mark E. Biddle, ed. Ernst Jenni and Claus Westermann (Peabody, Mass.: Hendrickson Publishers, 1997), 2:738. [22]Ronald B. Allen, “עָצַב,” in *TWOT*, 2:687–88. [23]3:16, 17ல் பாவத்தின் விளைவால் ஆதாம் ஏவாள் மற்றும் அவரது வழி தோன்றல்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள (5:29) எனும் (עִצָּבוֹן, *‘itstsabon*) அதே எபிரெயு பதத்தின் பெயர் சொல்லின் வடிவம். [24]எதிர்மறையான கோணத்தில் *மக்கஹிஜ்* என்பது ஆண்டவர் பாவத்தை நீக்குதல் அல்லது மன்னித்தல் எனும் பொருளிலும் கூறப்பட்டுள்ளது (சங். 51, 1, 9; ஏசாயா 43:25; 44:22). (Walter C. Kaiser, “מָחָה,” in *TWOT*, 1:498–99.) [25]D. N. Freedman and J. R. Lundbom, “חֵן,” in *Theological Dictionary of the Old Testament*, trans. David E. Green, ed. G. Johannes Botterweck and Helmer Ringgren (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 5:25. [26]J. Barton Payne, “תָּמִים,” in *TWOT*, 2:973–74. [27]Hamilton, 278. [28]H. J. Stoebe, “חָמָס,” in *TWOT*, 1:437. [29]H. Haag, “חָמָס,” in *Theological Dictionary of the Old Testament*, trans. David E. Green, ed. G. Johannes Botterweck and Helmer Ringgren (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1980), 4:478–87. [30]மற்றவைகள் 7:1-4; 8:15-17; 9:1-17.

[31]Jack P. Lewis, “Flood,” in *The Anchor Bible Dictionary*, 2:798–99. [32]*தெபா* எனும் எபிரெய பதத்தின் ஆரம்பம் உறுதியில்லாததாக இருக்கிறது. “பெட்டகம்,” “பெட்டி,” அல்லது “சவப்பெட்டி” என பொருள் தரும் எகிப்திய மொழி சொல்லிருந்து கடனாக பெற்ற பதமாக இருக்கக்கூடும். (Bruce K. Waltke, “Ark of Noah,” in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans

Publishing Co., 1979], 1:291). [33]Ronald F. Youngblood, “תֵּבָה,” in *TWOT*, 2:964. [34]Irene Jacob and Walter Jacob, “Flora,” in *The Anchor Bible Dictionary*, 2:805. [35]Kenneth A. Mathews, *Genesis 1—11:26*, The New American Commentary, vol. 1A (Nashville: Broadman & Holman Publishers, 1996), 364. [36]*The Epic of Gilgamesh* 11.30, 57–58. [37]Mathews, 365. [38]Hamilton, 282. [39]7:11 மற்றும் 8:14 ன்படி அவர்கள் பேழையில் இருந்த காலம் ஒராண்டு மற்றும் பத்து நாட்களாகும். [40]பல்வேறு வேத வசனங்கள் ஆண்டவருடைய சினத்தை பற்றி குறிப்பிடுகிறது. (எடுத்துக்காட்டிற்கு, உபா. 9:7; 2 நாளா. 24:18; எசே. 7:19; எபே. 5:6; கொலோ. 3:6 ஆகியவற்றில் காணவும்.)

[41]Aristotle *Physics* 8.6.